BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
## ORU PAPER

Paper - 01 Issue - 04 06 Friday August 2004 விற்பனைக்கல்ல

020 8683 1792
322-324 London Road, Croydon

020 8767 5333
76 Tooting High Street, London

DIAMONDS PALACE
MITHUS Jewellery



உன் சிங்காரச் சிரிப்பிற்கு பொன் அள்ளிக்கொடுக்கோணும்
என்னாளும் உனைப்போல் சேயாவே இருக்கோணும்

pg06 Poverty of Political Vision and Leadership

pg19 Its obesity... damn it!

pg23 கலை வளர்க்கும் பூனைகள்

pg30 எதிர்கால சினிமா



ஸ்ரீ ஜுவல்லர்ஸ்
110 Hoe Street, Walthamstow
020 8509 7588

TASTY LAND

சுவையும் தரமும் மிக்க இலங்கை, இந்திய உணவுகளை இதமாக உண்பதற்கு இன்றே நாடுங்கள்

Tasty Land Indian Srilankan Cousine



234 Ealing Rd
Wembley
020 8903 8777

CAR CHECK
MOT AND REPAIR CENTRE

M.O.T pertol/Diesal/Catalyst
M.O.T Repair Work
Tyres
Exhoust



Wheel Balancing
Wheel Allingment
Shock Absorbers
Servicing & Engine Tuning
Unit 17, Stonefield Close,
Off Stonefield Way,
Middlesex
020 8841 1880
OPEN: MON-SAT 8.00 AM - 6.00 PM

என்றும் நியாயமான விலையில் புதுப்புது
வடிவங்களில் நீங்கள்விரும்பும் தங்கநகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

நம்பிக்கையும் நாணயமும் மிக்க
ஒரு நிறுவனம்

ரதி ஜுவல்லர்ஸ்



28 Ealing Road, Wembley
Middlesex HA0 4TL
020 8903 3063
Open: Mon-Sat 10am - 6.30pm and Sun 12am - 6.30pm

MortgageLINK *The National Mortgage Network*

100% MORTGAGE – எந்த விதமான DEPOSIT
இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?

ஏற்கனவே வீடு பார்த்து MORTGAGE OFFER எடுத்து வீடு கையில் வரும் நிலையில் DEPOSIT, STAMP DUTY களுக்கு காசு இல்லையா? £15, 000 பவுண் கடன் உடன் பெற்றுக் கொடுப்போம்.

COUNCIL RIGHT TO BUY எந்தவிதமான பிரச்சனைக்குரிய கவுன்சில் வீடுகளுக்கும்
MORTGAGE மற்றும் மேலதிகமான பணமும் பெற்றுக்கொடுப்போம்

Mobile: 07930 62 65 85
020 8767 8487
125B MITCHAM ROAD TOOTING, LONDON SW17 9PE
YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT

"நான் பேச நினைப்பதெல்லாம்
நீ பேச வேண்டும்"



Take Pride in what you drink!

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## C.V. Construction Service Limited

32 Links Road, Tooting, London, SW17 9ET
Home No. 0208 401 6824 , Fax No. 0208 401 6824, Mobile No. 07932 626 920



FIRM AND NEAT DESIGN மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட அசல் KITCHENS & BATHROOMS

உங்கள் வீடுகளுக்கு மெருகூட்டி பெறுமதியைக் கூட்ட எம்மை உடன் நாடுங்கள்

**Your Complete Building Services**
For Peace Of Mind



BRILIENT FINISH AND COLOUR OF VARIOUS DESIGNS TO CHOOSE FROM.

# 0208 401 6824

KUMARANS

# குமரன்ஸ்

KUMARANS

*Wholesale & Retail*

142-144 Hoe Street,
Walthamstow, London E17 4QR

Tel: 020 8521 4955
020 8521 4411
020 8530 3033

Fax: 020 8521 9482
020 8530 5655

**வங்கி மூலம் துரித பணமாற்றுச் சேவை!!!**

***Smart Money Exchange*** to Sri Lanka, India, Pakistan, Switzerland, Germany and Canada
Reg. No. 121 14995 00001

லீலா

உங்களுக்கு தேவையான லீலா மற்றும் கிருஷ்ணா தயாரிப்புப் பொருட்களை மொத்த விற்பனை விலைக்கு பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்



KRISHNA


## KUMARAN TEXTILE


136 HOE STREET
WALTHAMSTOW
LONDON E17 4QR



Tel. **020 8521 3444** e-mail: textile @ kumarans.uk.com

# "Agonies & Aspirations of the Tamil Struggle"





*Seen at the function (left to right)*
*Rev.Dr.S.J.Emmanuel, Professor S.K.Sitrampalam, Ivan Pedropillai and S.Sivanayagam*

The above book authored by Fr.S.J. Emmanuel was released at a public function held at the Harrow High School on the 30th July, in the presence of a large audience. The book was dedicated to the late "Mamanither" Kumar Ponambalam. Mr. Ivan Pedropillai chaired the book launch and the speakers were Fr. Emmanuel himself, professor S.K.Sitrampalam of the Jaffna University and S.Sivanayagam the well-known journalist. Mr. Fatimaharan introduced the speakers. Fr.Emmanuel was honoured by Mr.Sivaranjit, managing director of International Broadcasting Corporation (IBC) who draped him with a "Ponnadai". The function was organised among others by Mr.Fatimaharan and Mrs.Loga Kankeyan.

Fr. Emmanuel, a former vicar general of the catholic chruch of Jaffna, has during his self exile in UK and in Germany addressed several audiences of the international community on the Tamil struggle for freedom. Some of these addresses were published in Germany under the title "Let my people go".

பத்தொன்பது வருடங்களாக சமூகத் தொண்டாற்றி வரும் தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு (TRAG) கடந்த 24 ம்திகதி கலாச்சார விழா ஒன்றை மேற்கு லண்டன் வெம்பிளியில் நிகழ்த்தினர். TRAG இலவசமாக ஆலோசனைகளை குடிவரவு, நலன்புரி, சுகாதாரம், வீட்டுவசதி இன்னும் இதுபோன்றவை சம்பந்தமாகவும், அத்துடன் இலவச ஆங்கில வகுப்புக்கள், முதியோர் சங்கம் போன்றவற்றையும் நடாத்தி வருகின்றனர்.

தொடர்புகளுக்கு 0208 459 9070.





கனடா வரசித்தி விநாயகர் ஆலய உற்சவம்





# கென்டன் தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா



கென்டன் தமிழ்ப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, இரண்டாவது ஆண்டாக சென்ற 18.07.2004 ஞாயிற்றுக்கிழமை Hendon High School மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு சின்னையா பாலசுந்தரம் அவர்களும் அவரது துணைவியாரும் கலந்து சிறப்பித்தனர். கௌரவ விருந்தினராக இலண்டன் பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் திரு சுவாமிநாதன் அவர்கள் கலந்துகொண்டார்.

யாழ் இராமநாதன் நுண்கலைப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் பண்ணிசைமணி திருமதி தயாளசுந்தரி பரந்தாமன் அவர்கள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். முதலில் தாயகத்தில் தம் இன்னுயிரை ஈந்த மாவீரர்களுக்கு இரண்டு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. மாணவர்கள் பாடசாலைக்கீதம் இசைத்ததை அடுத்துதிரு ச.சிவகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்க, தலைமை ஆசிரியை திருமதி சுமதி சிவமோகன் பாடசாலை ஆண்டறிக்கை வாசித்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்களின் நடனங்கள், நாடகங்கள், நாவன்மைகளுடன், வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், விசைப்பலகை எனப் பல தரமான நிகழ்ச்சிகள் மண்டபம் நிறைந்த சபையினருக்கு விருந்தாக வழங்கப்பட்டது. இறுதியில் பல துறைகளிலும் திறமையான மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.



இவ்வாண்டின் சிறந்த மாணவர்களுக்கான விருதை செல்வன் அர்ஜுன் பாஸ்கரன், செல்விகள் வினுஜா பிரபாகரன், தீபிகா அலெக்ஸாண்டர், ஐஸ்வரியா பாலகிருஷ்ணன், புண்யா செல்வமுருகானந்தம், பாணுஜா முருமூர்த்தி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சிறிது காலத்திற்குள்ளேயே துரித வளர்ச்சியடைந்து சிறப்பாக இயங்கிவரும் இப்பாடசாலையின் புதிய தவணை அடுத்த மாதம் 6ம் திகதி ஆரம்பமாகின்றது.



அரங்கேற்ற மலர்கள்
அழகாய் அரங்கேற


Full Colour specialists
Origination &
Design studios
Computer to Plate
Nexscan Heidelberg

**Vasan** Printers
**45A, Crusoe Road, Mitcham, Surrey CR4 3LG**

| | |
|---|---|
| telephone | 020 8646 2885 |
| fax | 020 8401 8612 |
| isdn | 020 8640 8251 |
| mobile | 07903 425 671 |

# பிரித்தானிய செய்திகள்

## அமெரிக்க சிறையில் பிரித்தானியருக்கு நடந்த சித்திரவதை



ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்டு குவான்ரனாமோ தீவில் சிறையிடப்பட்டுள்ள கைதிகள் மீது நடாத்தப்படும் சித்திரவதைகள் பற்றி அண்மையில் அங்கிருந்து விடுவிக்கப்பட்ட பிரித்தானிய இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ருகல் அஹமத், அஸிவ் இக்பால், சாபிக் இராசுல் ஆகிய இம் மூன்று இளைஞர்களும் 2001 ஆண்டு நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தானில் வைத்து கூட்டுப்படைகளுக்கு விசுவாசமான ஜெனரல் டொற்சம் தலைமையிலான ஆயுதக் குழுவினால் கைது செய்யப்பட்டு அமெரிக்கப் படைகளிடம் கையளிக்கப்பட்டனர். அங்கிருந்து அழைத்து செல்லப்பட்டு, குவான்ரனாமோ தீவில் அமெரிக்க படைகளினால் நடாத்தப்படும் "காம்ப் அல்பா" (Camp Alpha) விசேட தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, மத்திய இங்கிலாந்தின் ரீப்ரன் பகுதியை சேர்ந்த இந்த மூவரும் இவ்வருடம் மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டனர்.

தாங்கள் சங்கிலிகளால் என்நேரமும் பிணைக்கப்பட்டிருந்தாகவும், இதனால் ஒருவாறு ஒருக்களித்த நிலையிலேயே படுக்க முடிந்ததாகவும், ஆனால் நித்திரை செய்ய முடியாதவாறு மிகப்பிரகாசமான ஒளி தம்மீது பாய்ச்சப் பட்டதாகவும் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி விபரித்துள்ளனர்.

வளைந்து இருக்க பணித்துவிட்டு ஆசனத்துவாரமூடாக எதனையோ செலுத்தி குதத்தை குடையும் வலிமிகுந்த சோதனைகள் தம் மீது மேற்கொள்ளப்பட்டதாகவும், தாங்கள் விசாரிக்கப்பட்ட போது காதையடைக்கும் வகையில் சத்தமான இசையை ஒலிபரப்பு செய்யப்பட்டதாகவும் "ரீப்ரன் மூவர்" (Tipton 3) என அழைக்கப்படும் இவ்விளைஞர்கள் சார்பில் வெளியிடப்பட்ட 115 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கார்டியன் (The Guardian) பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதைவிட அமெரிக்க படைகள் தம்மை தூசண வார்த்தைகளாலேயே அழைத்து கொண்டதாகவும், அடிக்கடி தங்களை கொன்றுவிடப் போவதாக பயமுறுத்தியதாகவும் குறிப்பிடடுள்ளனர். இதைவிட அங்கு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் பல விதமான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாதாகவும், இதனால் அவர்கள் மனநிலை குழம்பிக் காணப்படுவதாகவும் இவ்வறிக்கையில் விபரிக்கப் பட்டுள்ளது.

2000ம் ஆண்டில் படம் பிடிக்கப்பட்ட ஒரு வீடியோ பிரதியில் ஒசாமா பின்லாடன் மற்றும் உலக வர்த்தக மைய குண்டுவெடிப்பின் சூத்திரதாரி முகமட் அட்டாவுடனும் இந்த இளைஞர்கள் காணப்பட்டதாக சீஐஏ யினால் குற்றம்சாட்டப்பட்டிருந்தனர். ஆனால் இதே காலப்பகுதியில் இவர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்ததை பிரித்தானிய உளவுத்துறை உறுதிசெய்ததையடுத்து குவான்ரனாமோ சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

## கறி உணவகங்களுக்கு நெருக்கடி

"இனிவரும் வெள்ளிக் கிழமைகள் முன்பு போல இருக்கப்போவதில்லை" இது பிரித்தானியாவின் கறிப்பிரியர்கள் அண்மையில் இவ்வுணகங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி கூறிய கருத்து.

ஆசிய மக்களால் குறிப்பாக இந்தியர்களாலும் பங்களாதேசியர்களாலும் நடாத்தப் படும் இவ்வுணவகங்களில் பெரும்பாலும் புதிதாக நாட்டுக்குள் வரவழைக்கப்பட்ட தொழிலாளர்களே பணிபுரிந்து வருகின்றார்கள். இதுவரை காலமும், தொழிலாளருக்கு எந்த தட்டுப்பாடுமில்லாத இந்தியா, பங்களாதேஸ் மற்றும் பாக்கிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து மிகவும் குறைந்த வேதனத்தில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் குடிவரவு திணைக்களம் வேலைக்கான அனுமதி பத்திரம் (Work Permit) வழங்குவதில் தற்போது மிகவும் இறுக்கமான நடைமுறைகளை கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது. இதை விட அடிக்கடி திடீர் சோதனைகளை மேற்கொண்டு முறையான அனுமதிப் பத்திரமின்றி தொழிலாளரை வேலைக்கு அமர்த்தும் உணவகங்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்நிலையில் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக சமையலாளர்களுக்கும், பரிமாறுபவர்கட்கும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குறைந்த வேதனத்தில் தொழிலாளர்களை உள்ளூரில் பெற்றுக் கொள்ள முடியாமையால், அண்மையில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து தொழிலுக்காக வந்துள்ளவர்களை இவ்வுணவகங்கள் வேலைக்கு அமர்த்தின. ஆனால் இவர்களுக்கு இந்திய உணவு வகைகளில் பரீட்சியமில்லாதாலும் மொழிப் பிரச்சனைகளாலும் இந்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

## கவுன்சில் வீடுகளை வாங்கும் உரிமை தொடரும்

உள்ளூராட்சி சபைகளுக்கு சொந்தமான வீடுகளில் நிரந்தரமாக வசித்து வருவோர், குறித்த காலத்தின் பின்னர் தாம் வாழும் வீடுகளை தள்ளுப்படி விலையில் வாங்கும் உரிமையை பெற்றுள்ளார்கள். பொதுவாக இரண்டு வருடங்கள் வாழ்ந்தாலே இந்த உரிமையை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த உரிமை சமூக குடிமனைகளின் தொகையை குறைத்து வருவதாகவும் அதனால் இவ்வுரிமையை இரத்து செய்யப்போவதாக ஆளும் தொழில் கட்சி கூறிவருகின்றது.



ஆனால் தாம் ஆட்சிக்கு வரும்பட்சத்தில் தற்போது இருந்துவரும் வீடு வாங்கும் உரிமை தொடருமென கொன்சவேர்ட்டிவ் கட்சி தனது வீட்டுக்கொள்கை தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளது. கட்சியின் முந்நாள் தலைவியும் புகழ் பூத்த பிரதமர்களில் ஒருவருமான மா?கிரட் தாட்சர் காலத்திலேயே இத்திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

தாங்கள் வாடகைக்கு பெற்றுக்கொண்ட வீட்டை அங்கு வாழ்ந்துவரும் காலத்தை பொறுத்து 60 சத வீதம் வரையான தள்ளுப்படியுடன் பெறும் இவ்வுரிமையுடன், வெளியில் தனியார் வீடுகளை தள்ளுப்படியுடன் கொள்முதல் செய்யக்கூடிய உரிமையும் வழங்கப்படும் என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி உள்ளூராட்சி சபைகளுக்கு சொந்தமான வீடொன்றை நிரந்தர உறைவிடமாக பெற்றுகொண்ட ஒருவர் தானிருக்கும் வீட்டுக்கு பதிலாக வெளியில் தனியார் வீடொன்றை வாங்க விரும்பின் அதற்கு உதவித் தொகையாக மேற்படி தள்ளுப்படிக்கு இணையான தொகை அரசால் வழங்கப்படும்.

வரும் இலையுதிர் காலத்தில கொன்சவே?ட்டிவ் கட்சியின் இவ்வறிக்கை வெளியிடப்படும். இதற்கிடையில், ஆளும் தொழில் கட்சி அரசு இவ்விதம் வீடுவாங்கும் உரிமையை பெற குறைந்த பட்சம் 5 வருடங்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என தற்போதுள்ள சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வரவிருக்கின்றது,

## குற்றத்தை மறுக்கின்றனர் சந்தேக நபர்கள்



இனத்துவேசத்தின் காரணமாக ரவிசங்கர் கதிர்காமநாதன் என்ற தமிழ் இளைஞரை தாக்கி மரணிக்கச் செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அஸ்போர்ட்டை சேர்ந்த ஜேம்ஸ் றொசிட்டர் (22 வயது), ரோணி பைல் (18 வயது) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு ஜூலை 19ம் திகதி நீதிமன்றுக்கு எடுக்கப்பட்டபோது தங்களுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என இந்த இருவரும் மறுதலித்தனர். தடுப்புக் காவலில் இருந்தபடியே தொலைக்காட்சி தொடர்புகள் மூலம் இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிபதி இவர்களை தொடர்ந்து செப்ரெம்பர் 3ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பணித்துள்ளார்.

கதிர்காமநாதன் கடந்த ஏப்பிரல் 22ம் திகதி, தனது வேலை முடிந்து அஸ்போர்ட் நகரிலுள்ள பாதசாரிகளுக்கான பாலம் ஒன்றினூடாக நடந்து வந்து கொண்டிருந்த பொழுது தாக்கப்பட்டார். வில்லியம் ஹார்வே மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இவ்விளைஞர் மே மாதம் 6ம் திகதி அங்கு மரணமானார்.

டோவர் இறங்கு துறைக்கு அருகாமையிலிருக்கும் அஸ்போர்ட்டில் அண்மைக் காலமாக மேற்கொள்ளபடும் அகதிகள் வருகைக்கு எதிரான பிரச்சாரங்களே, அதிகரித்துவரும் சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்களுக்கு காரணம் என பசுமை கட்சியினால் (Green Party) இச்சம்பவம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**Caaveri Products**
காவேரி ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

MD, Lanka Soya,
Munchi Biscuits,
Tin Fish, Dry Fish

பொன்னி அரிசி பூநகரி
மொட்டைக் கறுப்பன் அரிசி
ஆகியவற்றின தனித்துவமான
விநியோகஸ்தர்

**Caaveri Europe Ltd**
80 Markhouse Road
Walthamstow
London E17 8BG

Import & Export
Tel. 020 8520 1923
Fax. 020 8509 7487
Web. www.caaveri.com

Special Cakes for all your special occasions!

Ranji's Cakes
Tel: 020 8930 5552
Mob: 079 4671 3311



**PERMA**
INTERNATIONAL SHIPPING LTD

உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்

நேர்மையான பிரத்தியேக சேவைக்கு நாட வேண்டிய இடம்

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
தொடர்புகளுக்கு: சிவா
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Fax; 020 8646 5557
Mobile; 07939 550397

# மக்கள் களம்

ஆசிரியருக்கு,

தங்களின் பத்திரிகை இன்றுதான் பார்க்கக்கிடைத்தது. நல்ல முயற்சி. அதன் 10ம் பக்கத்தில் உங்கள் சற்று மாறுதலுக்காக என்றொரு கட்டுரை பார்த்தேன். அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு நான் என்றும் ஒப்புதலுடையவன். வரவேற்க வேண்டிய நல்ல எண்ணங்கள் அவை. வாழ்துக்கள். ஒரு சிறு சந்தேகம் ஏன் இந்த ஒரு பேப்பர் என்ற பெயர் என்பதுதான். நாம் குமுதம் றிப்போட்டர், ஜூனியர் விகடன், இந்தியா டுடே, சினிமா போஸ்ட் என்பவை பற்றியெல்லாம் கேலியாக எண்ணிக் கொண்டோம். இப்போ நாம் ஏன் இப்படி? புரியவில்லை.

*அன்புடன்*
*மா.குலமணி*
*புரோம்ளி*

ஆசிரியருக்கு,

வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தால் மனைவி முகம் கொடுத்து பேசுவதாக இல்லை,முகம் முழுக்க தொலைக் காட்சிப் பெட்டிக்குள்ளதான் இருக்கிறது, என்னைவிட கோடீரத்துக்கும் அப்பாவுக்கும்தான் மரியாதை, எனக்கோ அவளிண்ட அப்பாவுக்கோ மரியாதையே இல்லாமல் போய்விட்டது. இந்தச் சீரழிந்த சீரியலுகளால எங்கண்ட சனம் நாசமாக போகிறது ஏதாவது செய்யுங்கோ.

*பாலக்கிருஷ்ணன்*
*ஈஸ்ட்டாம்*

ஆசிரியருக்கு,

லண்டன் தமிழர்களை பொறுத்தவரையில் வேலை வெற்றிடங்கள் குறித்தோ வாடகை வீடுகள் குறித்தோ தகவல் பெறுவது இங்கே சிரமதானது. அதனால் இது தொடர்பான தகவல்களுக்காக உங்கள் பத்திரிகையில் ஒரு சிறு பகுதியினை ஒதுக்கினாலென்ன?

*சுந்தரராஜன்*
*கிங்ஸ்டன்*

ஓசியிலே ஒரு பேப்பருக்கு!
ஓசியிலே ஓர் பழங்கவிதை

*வல்வெட்டித்துறை பாய் கப்பலில்*
*வந்து குவியுதடி பண்டமடி*
*வாய் நிறைய தண்டு*
*வெத்திலை போடலாம்*
*வாங்கோ கும்மி அடியுங்கடி*

*வத்தை சலங்கு கட்டுமரம் தோணி*
*வள்ளங்கள் வந்து குவியுதடி*
*எத்தனை பண்டங்கள் ஏத்தி வருகுது*
*எல்லாமே கொள்ளை லாபமடி*

கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை

*தகவல்.ஐ.அ.சிவானந்தம்*
*மிச்சம்*

ஆசிரியருக்கு

தங்கள் பத்திரிகையின் மூன்று இதழ்களிலும் ஒரு விடயத்தினை அவதானிக்ககூடியதாக இருந்தது, உங்கள் பத்திரிகையின் முகப்பினை சினிமா நட்சத்திரங்கள் ஆக்கிரமிக்க வில்லை இனியும் இதனையே தொடருவீர்களென நம்புகிறேன்?

*செ. காந்தன்*

ஆசிரியருக்கு,

என் பிள்ளைகள் தமிழ் பத்திரிகை ஒன்றினை முதல் முதலில் வாசித்தார்கள் என்றால் அது உங்கள் பத்திரிகைதான். ஒருபேப்பருக்கு நன்றி .

*திருமதி. சசிகலா*

ஆசிரியருக்கு,

உங்கள் பத்திரிகையில் பல பக்கங்கள் நன்றாக அமைந்திருந்தாலும் ஆங்கிலம் கலந்த தமிழில் வெளிவரும் கட்டுரைகளை காண மனவேதனையாக இருக்கிறது. ஒரு புதிய தமிழை வளர்கிறீர்களா? வேண்டாம் கட்டுரை வழங்குபவர்கள் முடிந்தால் அழகு தமிழில் எழுதுங்கள். ஆசிரியர் அப்படியான கட்டுரைகள் வந்தால் தயவு செய்து வெளியிட வேண்டாம். எமது இளைஞர் சீரழிய வேண்டாம்.

*நலன் விரும்பி*
*நியு போடன்*

ஆசிரியருக்கு,

எந்தவொரு பத்திரிகைகளும் இரண்டு ஆண்டு செய்திகளை ஒரே நாளில் தரமாட்டார்கள். ஆனால் நீங்கள் மட்டும் சில பக்கங்கள் 2003ம் சில 2004மாக செய்தி தருகிறீர்கள் அதிசயம் தான். வாழ்க உங்கள் பணி.

*ராஜன்*
*சவுத்தோல்*

ஆசிரியருக்கு,

விமலின் கட்டுரை படிக்கக் கிடைத்தது நல்ல திட்டம் வரவேற்கவேண்டியது ஆனால் எங்களுக்கு யார் அப்படிச் செய்யப் போகிறார்கள்? சிக்கல்களில் மாட்ட எங்களுக்கொன்றும் ஆசையில்லை எல்லாம் நிர்ப்பந்தம்தான் யாராவது உதவி செய்ய முன்வாருங்கள்.

பிற்குறிப்பு: அப்படியே என்ர விசாவையும் பார்த்து ஏதாவது செய்தால் இன்னும் உதவியாக இருக்கும்.

*டீப்பக்*
*டீட்டிங்*

ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகையின் 3 பிரதிகளும் எனக்குக் கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி ஆக்கங்கள் சிறந்தவையாக இருந்தன. அதைவிட உங்கள் பத்திரிகையின் வரவுக்குப்பின் மற்றைய பத்திரிகைகளும் சிரத்தையெடுத்து இயங்குவது என்னால் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது (கீரைக்கடைக்கும் எதிர் கடை வேண்டும்) ஒரு பேப்பருக்கு நன்றி!

*ஒரு பேப்பர் பிரியன்,*
*ஈலிங் புரோட்வே.*

ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகை பார்த்தபோது சந்தோஷமாக இருந்தது ஏனெனில் பொழுதுபோக்கு விடயங்கள் அறிவுசார் விடயங்கள் என சிறப்பாக இருந்தது. அத்துடன் அகதிகள் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்தும் ஏதாவது எழுதினால் என்னைப் போன்ற பலருக்கு உதவியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

*ரமணன்,*
*வெம்பிளி*

*அன்பின் ரமணன்!*

*இதுசம்பந்தமான விடயங்கள் குறித்து விளக்கமளிக்க சட்டவல்லுனர்கள் உதவ முன்வருவார்கள் என நம்புகிறோம்.*

*—ஆசிரியர்.*

ஆசிரியர்

அண்மையில் விம்பிள்டன் தேர் கோலாகலமாக நடைபெற்றது விழாவின் போது இந்தியாவைச் சேர்ந்த அனாதை இல்லம் ஒன்றுக்கு நிதி சேகரித்த ஒரு சகோதரியைக் காணக் கூடியதாக இருந்தது. நானும் என்னால் ஆன சிறு உதவியினை வழங்கினேன். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும் என்பதற்காக அல்ல. யார் எங்கேயிருந்தாலும் நல்லாயிருக்கட்டும் என்று.

*ஈழவேந்தன்*

## காக்க காக்க . . .

### ராசா ராசா மன்மத ராசா

நண்பர் ஒருவரது குழந்தையின் பிறந்தநாள் விழா!

விழா ஒரு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவின் நடுவே திடீரெனத் தோன்றிய ஒரு அளிக்கையாளர் (Presenter என்பதன் தமிழ்) அங்கிருந்த சிறுவர் சிறுமியரை அழைத்து போட்டி நிகழ்ச்சி ஒன்றைத் தொடக்கினார். அது பாட்டுப்பாடும் ஒரு நிகழ்ச்சி.

ஒரு சிறுவன் பாடத் தொடங்கினான் ராசா ராசா மன்மத ராசா . . . என்று பாட அங்கிருந்த பலர் அப்பாடலில் லயித்துத் தலையாட்டித் தாளம் போடத் தொடங்கினார்கள்.

எனக்குப் பக்கத்திலிருந்த ஒருவர் என்னிடம் கேட்டார் நீங்கள் அப்துல் ஹமீதின்றை விழாவுக்கு வருவீர்கள்தானே? என்று.

ஓம் கட்டாயம் போகத்தானே வேணும்! ஏனென்டால் இந்தப் பத்து வயதுப் பொடியன் இந்தமாதிரிப் பாட்டுப் பாடுற நிலமைக்கு அவர்தானே பிதாமகர் என்ற இன்னுமொருவர் சொன்னார்.

நாங்கள் கொண்டாடிப் பழகின சனம். கலியாண வீடும் கொண்டாட்டந்தான். செத்த வீடும் கொண்டாட்டந்தான்.

எதைக் கொண்டாடுவது என்பதை நாங்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டாட வேண்டும்.

நெல்சன் மண்டேலாவைக் கொண்டாடுங்கள்.

அன்னை தெரேசாவைக் கொண்டாடுங்கள்.

மக்களுக்காக தம் உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களைக் கொண்டாடுங்கள்.

இவர்களெல்லாம் சமூகத்திற்கு உழைத்தவர்கள்.

இதை விடுத்து சினிமாச் சீரழிவுகளை எமது மக்கள் மத்தியில் விதைத்தவர்களைக் கொண்டாடுவது நாட்டில் இத்தனை துன்ப துயரங்களையும் தாங்கி நிற்கும் உங்கள் சகோதரங்களை அவமானப்படுத்தும் செயலாகவே இருக்கும்.

*— நாயகன்.*

ஒரு பேப்பர் ORU PAPER உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு £15 மட்டுமே!

**SUBSCRIPTION FORM**

Name: ______________________

Address: ______________________

Postcode: ______________________

Telephone: ______________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £15 க்கு "Jasmine Studio Ltd." என்பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mictham, London CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வாசகர் கவனத்திற்கு,

தங்களது கருத்துக்களை சுருக்கமாக எழுதி அனுப்புவது பல வாசகர்களின் மடல்களைப் பிரசுரிக்க இடமளிக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவிக்கிறோம்.

— ஆசிரியர்

CEC
PAY AT BARCLAYS
For your convenience you could now pay cash into our BARCLAYS Bank Account at any UK branch for instant fast cash transfers to Sri Lanka
A/C NO: 70713945
SORT CODE: 20-36-47
A/C NAME: C.E.C LTD.

OFFICIAL MONEY TRANSFERS SRI LANKA
Transfer fees from only £5*
FAST CASH WORLDWIDE MONEY TRANSFERS
IMMEDIATE COLLECTION
CREDIT TO ANY BANK ACCOUNT
UNBEATABLE EXCHANGE RATES
PROFESSIONAL SERVICE
நம்பிக்கை நாணயம் மிக்க துரிதமான சேவை
PEOPLE'S BANK · HSBC · NSB · SampathBank · COMMERCIAL BANK · Bank of Ceylon · SEYLAN BANK LIMITED
*FOR MORE INFORMATION CALL
CEC CURRENCY EXCHANGE CORPORATION LTD.
020 8886 4488
FASTCASH WEBSITE FOR RATES: www.cecltd.biz
No. 125 - 127, Bramley Road, Oakwood, London N14 4UT, E - Mail : info@cecltd.biz Fax : 020 8886 4499

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JULY 16, 2004, ISSUE 03

## விழிப்புணர்வு தேவை

கடந்த ஏப்பிரல் மாதம் 22ம் திகதி கென்ற் பகுதியிலுள்ள அஸ்போர்ட் என்னுமிடத்தில் தனது வேலைத்தலத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, வெள்ளையின துவேசிகளின் தாக்குதலுக்கு உள்ளாகினார் ரவிசங்கர் கதிர்காமநாதன் என்ற 24 வயதான தமிழ் இளைஞர். இத்தாக்குதலில் ஏற்பட்ட காயங்களிற்கு சிகிச்சை பெற வில்லியம் ஹார்வே மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இவ்விளைஞர் மே மாதம் 6ம் திகதி மரணமானார்.

இனத்துவேசிகளின் தாக்குதலுக்கு, சிறுபான்மையினத்தவர் உள்ளாவது இதுதான் முதல்தடவை என்றில்லை. ஆனால் கதிர்காமநாதன் விடயத்தில் பிரித்தானிய வாழ் தமிழ் மக்களோ அல்லது அவர்களுக்கு சேவை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களோ சிறிதும் அக்கறை செலுத்தாதது பெருத்த மனவருத்தத்தை தருகின்றது.

1993ம் ஆண்டு இதுபோன்ற தாக்குதலுக்கு உள்ளாகி மரணித்த ஸ்ரீபன் லோரன்ஸ் என்ற கறுப்பின இளைஞனுக்காக அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் மேற்கொண்ட போராட்டங்கள் நாடறிந்தவை. இப்போராட்டங்கள் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர தவறி விட்டாலும், காவல்துறை மட்டத்திலும் பொது வாழ்விலும், இனத்துவேசிகளுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஆனால் ஒரு லட்சம் மக்கள் தொகையை கொண்ட, அதுவும் கணிசமான அளவு புத்திஜீவிகளையும் கொண்டதாக பெருமைப்பட்டு கொள்ளும் எமது சமூகத்திலிருந்து, அநியாயமாகக் கொல்லப்பட்ட இவ் இளைஞனுக்காக குரல்கொடுக்க யாரும் முன்வரவில்லை. ஒரு அடையாள விழிப்புணர்வு போராட்டங் கூட நடந்ததாகத் தெரியவில்லை.

முரசம் தகவல் தொகுப்பில் எம்மத்தியில் பணிபுரியும் 75 க்கும் அதிகமான சமூக நிறுவனங்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்டளவு நிறுவனங்கள் தாயகத்திலுள்ள குறிப்பிட்ட ஊர்களைச் சார்ந்தவை. இவற்றின் சேவை பெரும்பாலும் அவ்அவ்வூர்களிலுள்ள கோவில் திருவிழாவுக்கு பணம் சேர்த்து அனுப்புவதுடன் முடிந்து விடுகின்றது. ஏனைய நிறுவனங்களோ, இவ்வகையான பொது விடயங்களில் என்ன நடவடிக்கை எடுக்கின்றன எனத் தெரியவில்லை.

இவ்விடயத்தில் ஜெர்மன் நாட்டு பாதிரியார் மாட்டின் நியுமில்லர் கூறிய அர்த்தம் பொதிந்த பின்வரும் வாக்கியங்களை நினைவில் கொள்ளல் நல்லது.

*முதலில் அவர்கள் யூதர்களை தேடி வந்தனர்*
*நான் பேசாதிருந்தேன் ஏனெனில் நான் யூதனல்ல*
*பின்னர் அவர்கள் கொம்மியூனிஸ்டுகளை தேடி வந்தனர்*
*நான் பேசாதிருந்தேன் ஏனெனில் நான் கொம்மியூனிஸ்டுமல்ல*
*அதன் பின்னர் அவர்கள் தொழிற்சங்கவாதிகளை தேடி வந்தனர்*
*நான் பேசாதிருந்தேன் ஏனெனில் நான் தொழிற்ச்சங்கவாதியுமல்ல*
*இப்போது அவர்கள் என்னை தேடி வந்துள்ளனர்*
*ஆனால் எனக்காக குரல் கொடுக்க யாருமேயில்லை*

சமூக சேவை நிறுவனங்கள் வெறும் பெயருக்கு இயங்குவதை விடுத்து, மனித உயிர்களுக்கு மதிப்பளித்து, இவ்விடயத்தில் விரைந்து செயல்படாவிடில் அவற்றின் இருப்புக்கே அர்த்தமில்லாமல் போய்விடும்.

## ஒரு பேப்பர் . . .

*வாசகர்களுக்கு ஒரு விடயம், தயவு செய்து உங்கள் ஆக்கங்களை சுருக்கமாக எழுதி அனுப்புங்கள், பிரசுரிக்க இலகுவாக இருக்கும்.*

*வருகிற ஆக்கங்களின் வரவு அதிகமாக இருப்பதனால் சகலருடைய ஆக்கங்கங்களையும் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.*

*இந்தப் பத்திரிகை குறித்ததான கவனத்தினை பிள்ளைகளுக்கும் ஏற்படுத்துமாறு கேட்டிருந்தோம், பெற்றோருக்கு நன்றி, சிறுவர்களிடம் இருந்து சில கடிதங்கள், ஆக்கங்கள் கிடைக்கப் பெற்றது.*

*மறுபடி, மறுபடி எழுதுவதற்காய் மன்னிக்கவேண்டும். ஒரு பேப்பர் உங்கள் கைகளுக்கு கிடைப்பதனை உறுதிப்படுத்த சந்தாதாரர்கள் ஆகிக்கொள்ளுங்கள். கடைகளில் வைத்த மறுநாள் தீர்ந்து விடுவதற்கு நாங்கள் என்ன செய்வது. (முடிந்து போகத்தானே வைக்கிறோம்)*

*ஒரு பேப்பரில் எம் உறவுகளின் நிழற்படங்கள் பிரசுரமாவது, எம்மினச் சூழலைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே. ஒத்துழைப்பிற்கு நன்றி.*

*விம்பிள்டன் திருவிழாவுக்குப்போன எமது புகைப்பட பிடிப்பாளர் அடி வாங்காத குறையாக திரும்பிவந்தார், தம்பி பாவம் ஏதோ எங்கட சனத்தை ஒரு பேப்பரில போடலாம் எண்டு போனது. இப்படி நடக்கும் எண்டு அது நினைக்கேல்லை.*

*ஒரு பேப்பரை மஞ்சள் பத்திரிகை என்று ஒருவர் கூறியதாக நாங்கள் கேள்விப்பட்டோம். யோசித்துப்பார்த்ததில் அவருக்கு மஞ்சள் காமாலை நோய் இருந்திருக்கலாம். அல்லது அவர் வெயிலில் வெளுறிய பேப்பரை பார்த்திருக்கலாம். எதுவாயினும் நாங்கள் மஞ்சள் பத்திரிகைக் காரர்கள் அல்ல. அது உங்களுக்கும் தெரியும்.*

*பத்திரிகையில் பழைய திகதி இருந்தது தொடர்பாக சிலர் எழுதி இருந்தீர்கள் நாங்கள் ஒன்றும் புதியதை கண்டவுடன் பழையதை மறப்பவர்கள் அல்ல, இருப்பினும் இனி அதனை உங்களுக்காக மாற்றி விடுகிறோம்.*

*ஓசிப்பேப்பர் என்ற சொல்லிற்காகவே எங்களோடு கணை தொடுத்தோர் பலர், இதோ சூடான செய்தி லண்டனின் பிரதான நிறுவனம் ஒன்று BUY 1 GET 1 FREE என்ற வார்த்தைக்கு ஒன்றுக்கு ஒன்று ஓசி என்று உபயோகிக்க எங்களிடம் அனுமதி கேட்டிருக்கிறது. (ஓ . . சிக்கு சொந்தக்காரர்கள் நாங்களே.)*


*தயவுசெய்து பத்திரிகையை வாசித்த பின்னர் கண்ட இடத்தில் கடாசிவிட்டுச் செல்லாதீர்கள் பெரிய இடத்தில் இருந்தெல்லாம் அழைப்பு வருகிறது (Westminster Council). தாங்க முடியவில்லை. இருந்தாலும் இது ரொம்ப ஓவரோ.*

EDITORIAL

# Sri Lanka : Poverty of Political Vision and Leadership.

Sri Lanka is a country that lacks many things - discipline on the roads, discipline in southern universities, discipline within the armed forces, now even discipline in the very House of Parliament where the so-called country's leaders are supposed to set the tone for the rest of the country. The recent brawls within that august assembly, the way even Buddhist bhikkus were manhandled by fellow Sinhalese Buddhist M.P.s themselves demonstrates the depths into which public life has sunk in a country which was once known as a Paradise on Earth. But what that country lacks most of all is wise leadership.





*On the left, two political converts to Buddhism*



*Chelvanayakam*

The poverty of political leadership effectively began eight years after independence, with the emergence of Solomon West Ridgeway Dias (SWRD) Bandaranaike, the father of the present President Chandrika Kumaratunga. His very first act in changing his religion from Christianity to Buddhism in order to achieve power displayed a moral lapse in behaviour. It must be remembered that S.J.V.Chelvanayakam, a born Christian, who was accepted as their Tamil leader by the overwhelming Tamil Hindu population until his death, did not see any need to change his religion, neither did his Hindu followers.

Bandaranaike's second act of folly was to introduce the "Sinhala Only" legislation, again in order to pander to the lower instincts of the Sinhala Buddhists and thereby gain power. He let out the evil genie from out of the bottle - like that goblin with magical powers in the Arabian tales, - but alas, having achieved his political ambition of achieving *Premiership, he did not know* how to put that genie back in the bottle. With that act alone, he sowed the seeds of Tamil alienation from the body politic, and the poisoning of relations between the two major communities in the island.

His third act of political cowardice was his inability to put down the anti-Tamil riots of 1958 which came about through his own selfish pursuit of power. For a whole week, Tamils were getting murdered in different parts of the country, gangs of thugs were spreading terror, but Prime Minister Bandaranaike did not know how to control the situation. It was left to the then Governor General Sir Oliver Goonetileke, a mere constitutional figurehead who had no powers under the constitution, to step in and restore law and order in the country. Bandaranaike paid the price for his erratic leadership by suffering the ultimate humiliation – being shot to death by a Buddhist priest in yellow robes while he bent low to pay his obeisance to his killer.

If Bandaranaike did not possess any great qualities of leadership, neither did any of his predecessors nor those who succeeded to power. Sir John Kotelawala was a gung -ho kind of colonel of the Volunteer Force who spoke first and thought later. Dudley Senanayake had a sense of fairness about him but he was too weak to be a leader. Bandaranaike's widow was a total disaster and not only impoverished the country, but made the ethnic issue worse, by her anti-Tamil policies.

J.R.Jayawardene was the worst rascal of all, - a co-author of the anti-Tamil pogrom of 1983 -- and the man who authored all the oppressive laws like the Prevention of Terrorism Act, which still remains in the statute book like a sword of Damocles hanging over the heads of the Tamil people. Ranasinghe Premadasa, born into the wrong caste and with lowly beginnings did better as a Sinhalese leader than all his "goigama" caste predecessors, but he too succumbed to the inbuilt Sinhala Buddhist chauvinism in the country.

It is the tragedy of the Sinhala people that they have neither the will nor the desire to extricate themselves from the evils of the Bandaranaike dynastic rule. From father to mother and now the daughter it is not the Tamils alone who have suffered under their rule, but the Sinhalese themselves, as well as the country itself. But that realization has not come to them, because they have been indoctrinated by the Buddhist clergy and the Mahavamsa mindset for too long that Tamils are their enemies.

As for President Chandrika Kumaratunga her infamous slogan – "Waging War for Peace" - is still part of her credo, and as long as she clings to that, the Sinhalese people cannot expect either a successful war or a durable peace.

கருத்து

# கோவிக்காமல் கொஞ்சம் யோசிங்க . . .

எல்லாளன்

இன்றைய நாளில் மதம் என்பது பலரது விமர்சனங்களிற்குள்ளாகி மதநம்பிக்கை தேவையா இல்லையா என்கிற பிரச்சனைகளை ஏற்படுத்தியிருக்கிறது. மதமாற்றங்கள், மதங்களுக்காக கௌரவ கொலைகளென பலவிடயங்களை அன்றாட வாழ்க்கையிலும் பத்திரிகைவாயிலாகவும் நாம் காண்கின்றோம். சிலர் கடவுளே இல்லை என்று சொல்லி தம்மை நவயுகக்காரர்கள் என்று காட்டிக் கொள்ளவும் விரும்புகிறார்கள். எவ்வாறாயினும் மனித சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளதென்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். அந்த அப்பாற்பட்ட சக்தி யார்? எந்த மதக்கடவுள்? இப்படியாக ஒவ்வொருவரும் தேடிப்போனால் என்ன நிகழும்? அதுதான் இப்போ நிகழ்ந்து வருகிறது, இந்துக்கள் சிவன் என்கிறார்கள், கிறீஸ்தவர்கள் கிறீஸ்த்து என்கிறார்கள், இஸ்லாமியர்கள் அல்லா என்கிறார்கள்,ஒவ்வொருவரும் பிற மதங்களில் பிழைகள் என்று சுட்டிக்காட்டுகிறார்கள், தெருச்சண்டையிலிருந்து சர்வதேச அளவில் யுத்தம் நடத்துகிறார்கள். இன்று உலகினை உலுப்புகிற யுத்தத்திற்கு மதம்தானே மிகப்பெரிய காரணம், இதுதான் இன்றைய நிலை.

நிச்சயமாக மதம் என்பது உருவாக்கப்பட்டதே, அவ்வாறாயின் மதத்தினை மனிதன் உருவாக்கி இருக்கலாம் அல்லது அந்த அப்பாற்பட்ட சக்தி (கடவுள்) உருவாக்கி இருக்கலாம், ஆனால் அந்த அப்பாற்பட்ட சக்தி உருவாக்கி இருந்தால் இந்த பூமியில் ஒரே ஒரு மதம்தான் இருந்திருக்கவேண்டும், நூற்றுக்கு மேல் இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியாயின் மனிதனால் தான் மதம் என்ற ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது. இதனை நிச்சயமாய் தவறென்று கூறிவிட முடியாது. நெருப்பினை மாத்திரம்தான் நாம் உருவாக்கிறோம் ஆனால் அந்த அதிசயமாய் பரவும் ஒளி எங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியாக இருக்கிறது. அதே போல் மனிதன் மதத்தினை உருவாக்கி அதனுடாக அவன் இறைவனை காண முற்படுகிறான்?. மனிதனுடைய வாழ்க்கையை சீர்படுத்தவே மதம் உருவாகியிருக்கிறது, ஏனெனில் எல்லா மதங்களும் இறைவனை அடைவது எப்படி என்றே சொல்லித்தருகின்றன. ஆக மதம் மனிதனை நிச்சயமாய் நெறிப் படுத்துகிறது. இங்கே எண்ணற்ற அளவில் வான்முட்டும் கட்டடங்களைக் காண்கிறோம். அவற்றை கட்டுவதற்கு முன்னர் அந்தக் கட்டடங் களை எப்படி அமைக்கப்போகிறோம் என்று வரைபடங்கள் வரையப்பட்டு இருக்குமல்லவா, அதன்பின்தானே கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கும். அதாவது இந்த வரைபடங்களை மூலமாக கொண்டே கட்டடங்கள் கட்டப்படுகிறது. இங்கே வரைபடங்களின் பங்குதான் எங்கள் வாழ்க்கையில் மதங்களின் பங்கு என்று கூற வேண்டும், மதம் எங்கள் வாழ்க்கையை கட்டுவதற்கு ஓர் வரைபடம்.

ஆனால் ஒவ்வொரு மதத்தவர்களும் ஒவ்வொரு கடவுளை வணங்குகிறார்களே என்றொரு கேள்வி எழலாம், என்ன செய்வது யாரும் அந்த இறைவனை நேருக்குநேர் பார்த்ததில்லையே. படகில் சென்று கொண்டிருந்த ஒருவன் ஆற்றில் தவறி விழுந்து தத்தளிக்கும்போது அவன் கைகளில் கிடைக்கும் மரக்குற்றி ஒன்றை போன்றதே நாம் வழிபடும் தெய்வங்கள், நாம் அந்த தெய்வங்களில் வலுவான நம்பிக்கை வைக்கின்றோம் நேர்த்தியாக வாழவேண்டும் என்று எண்ணி வாழ்கிறோம், கண்களால் காணமுடியாத அந்த அப்பாற்பட்ட சக்தியை இந்த தெய்வங்ளுடாக ஒவ்வொரு வினாடியும் எங்கள் வாழ்க்கையில் உணருகிறோம். இப்படியான தெய்வங்களுக்கு உற்சவங்கள், விழாக்கள், பெருநாட்களை எடுக்கிறோம். இப்படியான நிகழ்வுகளின் போது பிற மதத்தவர் களை கட்டாயம் ஆதரிக்க வேண்டும், இப்படிச் சொன்னால் எனக்கு அடிதான் விழும், ஆதரிக்க வேண்டாம் ஆனால் ஏளனம் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். இவையாவும் பக்தர்கள், இறைவனிடம் தாம் வைத்திருக்கும் அன்பினை வெளிப்படுத்தி அவனிடம் தாம் அதிகளவில் நெருங்கிச்செல்லும் நிகழ்வே அன்றி வேறேதுமில்லை. ஆக ஒரு மனிதனுக்கு மதம் தன்னுடைய வாழ்க்கையை நெறிப்படுத்த பெரிய அளவில் வழிசெய்கிறதென்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஆனாலும் இன்று சில மதமாற்றங்கள் எம்மினத்தவரிடையே அதிகளவில் சிக்கல்களை ஏற்படுத்துவதாக அமைந்துவருகிறது. மதம் மாறுதல் என்பது அவரவர் தனிப்பட்ட சுதந்திரம், ஆனால் ஒருவர் எதற்காக ஒரு குறித்த சமயத்தினை விட்டு விலகுகிச்செல்கிறார் என்பதை அறிந்து அதற்கான தீர்வுகளை காணுவதன் மூலம் மதங்களுக்கிடையிலான சிக்கல்களை ஓரளவில் தவிர்த்துக்கொள்ளலாம்

*அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலர்*
*அன்பே சிவமென்று யாரும் அறிகிலர்*
*அன்பே சிவமென்று யாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமென்று அமர்ந்திருப்பாரே*

*- திருமூலர்*

# இந்தியாவுக்குக் களங்கம் விளைவித்த வல்வைப் படுகொலைகள்

மிஸ்டர் மேனன்!... ஒரு நகரத்தை இவ்வளவு மோசமாகத் தாக்கி, வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து நோயாளிகளைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருக்கிறீர்... உம்முடைய செயல் எங்களுடைய நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது... இங்கு இருக்கின்ற பிரஜைகள் குழுவிடம் முதலில் நீர்மன்னிப்புக் கேட்க வேண்டும்....

ஊறணி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நின்ற பிரிகேடியர் சமேராம், மிகவும் கடுப்பாக நின்றமை கப்டன் மேனனை நிலைகுலையச் செய்துவிட்டது.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி வல்வெட்டித்துறை, ஊறணி வைத்திய சாலையில் வெறியாட்டம் ஆடிய இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்குத் தலைமை தாங்கிய கப்டன் கோபாலகிருஷ்ண மேனன் அன்று தனது உயர் அதிகாரி பிரிகேடியர் சமேராம் முன்னால் தலைகுனிந்து கூனிக்குறுகி நின்ற போதே என்றோ ஒருநாள் இந்த வல்வெட்டித்துறைக் கிராமத்தை அழிக்கவேண்டும் என்று சபதம் எடுத்திருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக 1989ஆம் ஆண்டு ஒகஸ்ட் திங்கள் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறைப் படுகொலைகள் இடம்பெற்று முடிந்தன.

1989ஆம் ஆண்டு ஒகஸ்ட் திங்கள் 2ஆம் நாள் ஊரிக்காடு இந்திய இராணுவ முகாமில் இருந்தும், பொலிகண்டி இராணுவ முகாமில் இருந்தும் வெளியேறிய இந்திய ஆக்கிரமிப்பு இராணுவக்கும்பலுக்குத் தலைமை வசித்தவர்களில் கப்டன் மேனன், கப்டன் கபூர் முக்கியமானவர்களாக இருந்தனர்.

ஆம்! கப்டன் மேனன் பழிவாங்கும் ஒருகளமாக அன்று வல்வெட்டித்துறையைக் குறிவைத்துச் செயற்பட்டான். அவனுடன் ஊரிக்காடு இராணுவ முகாம் பொறுப்பாளராக இருந்த மேஜர் சுதர்சன் சிங் தலைமையில் ஏ வடிவ வியூகம் அமைத்து விடுதலைப் புலிப் போராளிகளைக் குறிவைத்து நகர்ந்தபோதே இராணுவத்தினருடனான மோதல் ஆரம்பமானது.

வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் தாக்கப்பட்டபோது உடுப்பிட்டி இராணுவ முகாம் கேணல் சர்மா அன்று வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினூடாக வடமராட்சிப் பொறுப்பாளர் மேஜர் ஜேம்சுடன் செய்து கொண்ட கனவான் ஒப்பந்தத்திற்கு அமைவாக அங்கே இந்தியச் சிப்பாய்கள் தாக்கப்படாமல் இருந்தார்கள் என்ற உண்மை வெளியுலகத்திற்கு அன்று தெரியாது.

அந்தக் கனவான் ஒப்பந்தத்தை மீறும் வகையில் விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் செயற்பட்ட சீக்கியப்படைகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவே அன்று அவர்கள் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அன்று ஒன்பது சீக்கியச்சிப்பாய்கள் கொல்லப்பட்டது இந்திய ஆக்கிரமிப்பாளருக்குப் பேரதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். அதன் விளைவு!...

வெறிகொண்ட இந்தியப்படைகள் ஒகஸ்ட் திங்கள் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை நகரத்தையும் அயல் ஊர்களையும் சுற்றிவளைத்து ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு ஆடிய வெறியாட்டத்தில் நேர்ந்த வல்வெட்டித்துறைப் படுகொலைகள் வரலாற்றில் இந்தியருக்குக் கறை படிந்த செய்தியாக இன்றும் நிலைத்துவிட்டது.

அமெரிக்க இராணுவத்தினரின் வெறியாட்டத்திற்கு ஆளாகிய வியட்நாமின் மைலாய் படுகொலை போல் பிரித்தானிய இராணுவத்தினருக்கு இந்தியாவின் ஜாலியன் வாலா பாக் படுகொலை போன்று இந்தியாவுக்கு ஒரு வல்வைப் படுகொலை களங்கம் சேர்த்துவிட்ட வரலாறாகிவிட்டது.

ஆம், அந்தப் படுகொலையின் விளைவாக 63 அப்பாவிப் பொதுமக்கள், மாணவர்கள், பெண்கள், வயோதிபர் என்ற பேதமின்றி வெட்டப்பட்டும், சுடப்பட்டும், எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர்.

நூற்றுக்கதிகமானோர் காயப்படுத்தப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான வீடுகளும், கடைகளும் எரிக்கப்பட்டன.

15 திருமணமான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர்.

50இற்கும் அதிகமான இளம்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

பல இந்துக்கோயில்கள் சேதமாக்கப்பட்டன.

இவ்வளவும் செய்துமுடித்த இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிப் படுகொலைகள் நிகழ்த்துவதற்குக் காரணமாக இருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினால் அந்த ஒகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் எப்படி நிம்மதியாக உறங்கியிருக்க முடியும்?

அந்த அழியா நினைவுகள் - மறக்கமுடியாத அவலங்களை விதைத்துச்சென்ற கொடூரமான இந்திய இராணுவத்தையும் இந்திய அரசையும் துயரின் விளிம்பில் உழன்றுகொண்டிருக்கும் வல்வை மக்களால் எப்படி மறக்க முடியும்?... எப்படி மன்னிக்கமுடியும்?

அந்த நிலையிலும், இந்தியாவைத் தாய் நாடு என்று ஒரு காலத்தில் நம்பி இந்திய விசுவாசிகளாக இருந்து இந்தியர்களால் முதுகில் குத்தப்பட்ட இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களில் ஒருசில ஆயிரமாக இருந்து கண்ணீர் விடுவதைத் தவிர விடுதலை வேள்விக்கு ஆயிரக்கணக்கான உயிர்களை ஆகுதியாக்கிய வல்வெட்டித்துறை மக்களால் வேறு எதைத் தான் செய்யமுடியும்?

ஆனால், எமது நெஞ்சில் துயரங்களை விதைத்துச்சென்ற அந்தத் துன்பியல் நாள்களை நினைவு கூரும் ஒகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளையும் ஈழத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட படுகொலைகள் நிகழ்த்தப்படுவதற்குக் காரணமாகவும் பொறுப்பாகவும் இருந்த ராஜீவ் காந்தியையும் நிம்மதியான ஒரு நிரந்தரத் தீர்வுக்குத் தடையாக இருக்கும் இந்தியாவையும் எப்படி வல்வெட்டித்துறை மக்களால் மறக்க முடியும்.

இன்றும் அந்த நினைவுடன் வாழும் நாம் அனைவரும் அன்று இந்தியர்களால் கொல்லப்பட்ட எம்மவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

*பத்தாயிரம் கைகள்*
*இதைக் காவும்*
*பல்லாயிரம்*
*கண்கள்*
*இதை மேயும்.*

Book Review:

# Rajiv Gandhi Assassination:

## Ex-Police Chief D.R.Kaarthikeyan's Version of Truth

by: Sachi Sri Kantha

*Book Review: Triumph of Truth – The Rajiv Gandhi Assassination – The Investigation, by D.R.Kaarthikeyan and Radhavinod Raju, New Dawn Press Inc, New Delhi, 2004, 261 plus xxv pages.*



*Kaarthikeyan: The Author*

I have highest regards for the police officers of any nation, as long as they themselves are uncorrupt, unpretentious and abide the laws which they profess to uphold as their duty. Like thousands of folks, I had a policeman in my family. My maternal uncle Puvanendran was a lowly police constable in the Sri Lanka of 1950s, and my childhood memories include being 'playful handcuffing' by him. He quit the police force in early 1960s, when he had to learn Sinhalese language for salary increment and other benefits. In early 1960s, another of my uncles [K.T.Nadarajah, a maternal cousin of my mother and an elder sibling of journalist K.T.Rajasingham] lived in the same compound with us at Wellawatte, Colombo. He was serving as a police constable at the Bambalapitiya station. Nada uncle's pastime during his off-duty hours was settling with a bottle of arrack and a capella singing of poet Kannadasan's Tamil movie songs. Both uncles Puvanendran and Nadarajah are not among the living now.

Tamil movies produced in Madras usually portray policemen as two-dimensional caricatures or as foil for Chaplinisque comedy. But the 1962 tear-jerker movie Policekaran Magal, starring S.V.Sahasranamam, R.Muthuraman, R.Vijayakumari and comedian J.P.Chandrababu was an exception. My early memories of how an Indian policeman of contemporary era struggles hard in his job was from veteran actor Sahasranamam's role as a police constable. I provide these snippets from my Sri Lankan days as introduction to assert that I hate to be mean-spirited to any worthy effort of an Indian police officer. Thus, I'll assess the book authored by Devarayapuram Ramasamy (D.R.) Kaarthikeyan on the Rajiv Gandhi assassination with utmost sincerity based on the material provided by the author in his text.

Kaarthikeyan is a Tamil, and he served as the Chief of Special Investigation Team (SIT), established to un-knot the mystery behind Rajiv Gandhi's assassination, which took place in Sriperumbudur, Tamil Nadu, on May 21, 1991. Altogether, as listed in the Appendix D of the book, the SIT team consisted of 71 police officers, including the author; there were 4 Deputy Inspectors General of Police, 8 Superintendents of Police of CBI, 14 Deputy Superintendents of Police and 44 Inspectors of Police.

Already, Rajeev Sharma (a journalist; Beyond the Tigers – Tracking Rajiv Gandhi Assassination Kaveri Books, New Delhi, 1998).) and Subramanian Swamy (a politician, who was a Cabinet Minister when Rajiv Gandhi was assassinated; The Assassination of Rajiv Gandhi – Unanswered Questions and Unasked Queries, Konark Publishers, Delhi, 2000)) have presented their versions of 'truth'. In comparison to Rajeev Sharma and Subramanian Swamy, because of his lead role as the Chief of SIT, Kaarthikeyan would have been privy to much (as of now) unclassified information on the 1991 Sriperumbudur tragedy; thus I had greater expectations of being educated by this book. Sadly, this book was a disappointment. Like a professional striptease artist, Kaarthikeyan whets the curiosity of his audience in the cover blurb, but comes up short on in-depth revelations. What is revealed by him in 220 pages of main text - and 5 years after the Superme Court's Appeal verdict - is nothing new. But, I learnt from the book, what type of a person Kaarthikeyan is, though I have not met him even once.



*Indian Sikh soldiers in Sri Lanka with elderly Hindu pilgrims*

My assembled profile of Kaarthikeyan, the senior author of the book, can be presented as seven findings.

Finding 1: Kaarthikeyan is a gung-ho police chief who wouldn't wilt when the Destiny stares at him.

The author states his credo in his Preface: "I believe in destiny. When the time comes, no one can keep you on this planet; until that time comes, no one can take you away. I contended that Prime Minister Indira Gandhi was killed in her official residence by her own security guards; everyone born on this planet has to die, and by undertaking such a dangerous task, I have only added one more mode of dying." [p.x] This was Kaarthikeyan's answer to his wellwishers who were worried that the task he had undertaken to unravel Rajiv assassination was "too dangerous an assignment", since "the group responsible for the assassination was identified as the Liberation Tigers of Tamil Eelam (LTTE)."

Finding 2: Kaarthikeyan is nothing but a chicken-little when the Destiny stares at him.

Kaarthikeyan has informed the readers on how the 'warrant' on the LTTE leader was delivered in a chicken-little fashion. To quote, "Towards the end of January 1992, we decided to formally cite Prabhakaran and Pottu Amman as accused in the case and took steps, as per the Indian Criminal Procedure Code, to declare them as proclaimed offenders. The Sri Lankan government helped us in publishing the proclamation warrants in Sri Lankan newspapers. But due to the conditions in the north-east of Sri Lanka, the government expressed its inability to have the warrants served at the place of residence of the offenders" [p.150].

What happened to the gung-ho spirit of Kaarthikeyan who never feared for his life? Why he couldn't travel to Prabhakaran's land to deliver the warrant directly to his nemesis in 1992 – like a real man? Why he had to depend on the Sri Lankan government 'publishing the proclamation warrants in Sri Lankan newspapers'. Was this the correct step of a macho man? Prabhakaran and Pottu Amman were not even Indian citizens, and to issue proclamation warrants to them for a court trial in India via notices in Sri Lankan newspapers and tag them as 'proclaimed offenders' is long on publicity stunt but short on due process of law.

Finding 3: Kaarthikeyan was a total ignoramus about Sri Lankan Tamil affairs, until June 1989.

To the request made by the then Cabinet Secretary T.N.Seshan, asking him to visit Sri Lanka, Kaarthikeyan confesses sheepishly: "I said, 'I have never been to Sri Lanka. To be honest, I have not even read much about Sri Lanka. I have not even been following closely the happenings in Sri Lanka." [p.187] This was in mid 1989.

Finding 4: One of Kaarthikeyan's favorite English words is 'interrogation' and its exaggerated or euphemistic variants. Between pages 42 and 114, I counted this nasty word being used at least 32 times - specifically on Sri Lankan Tamils living in Tamil Nadu and low-brow Tamils of India. These deserve verbatim citations.


PAGE SPONSORED BY WWW.BRITISHTAMIL.COM

# கண்மணி ஜுவலரி

என்றும் உங்கள் வாழ் நாட்கள் ஞாபகத்தில்



020 8672 8744

கண்மணி ஜுவலரி
Southall அவர்களின் கிளை
33 Uppter Tooting Road
Tooting SQ17 7TR
விரைவில் திறக்கப்படவுள்ளது

# PAKEERATHY



Cake & Bridal Makeups
For All Your Occasion

கேக் மணமக்கள் அலங்காரம் ஆகியவற்றை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவும்



பகீரதி 020 8679 1307

அனைத்து மங்களகரமான நிகழ்வுகளிற்கும்
சிகை அலங்காரம்
முக அலங்காரம்
ஆடை அலங்காரம்
போன்ற அனைத்தையும் உங்கள் எண்ணம்போல்
நவீனமான முறையில் செய்துகொள்வதற்கு அழையுங்கள்

## PRABAS VIDEO

Thusi Bridal make up & cake decoration



156-158 Forest Road,
Walthamstow
E17 6JQ



020 8509 3322

## SPICELAND

FOR THE ASIAN TASTE OF
SPICE CURRY

For your Weddings, Birthdays or any other ceremonies, call us to make your day "cool" and satisfactory with our variety of food.


212 London Road Croydon 020 8667 1700



PALM PALACE

# PALM PLACE

Highly Recommended
Time Out, ES magazine
Evening Standard
Hot Tickets, Guardian
Rough Guide, Curry Club



Vegetarian &
Non Vegetarian
Specialised in Catering
for all occasins
Open 7 Days 12noon - 3pm
6pm - 11.30 pm

எங்களால்
மலர் அலங்காரம்
மண்டப வடிவமைப்பு
கேக், உணவு வடிவமைப்பு
உணவு பரிமாற்றம்
விழா ஒருங்கிணைப்பு வரை செய்து தரப்படும்

லண்டன் பத்திரிகைகளினால் பாராட்டப்பட்ட,
சிபாரிசு செய்யப்பட்ட உயர்தர உணவகம்,
பிரபல சுழத்து, தென்னிந்திய சமயற்கலை வல்லுனர்கள்,
அனுபவம் மிக்க பரிமாறுனர்கள் தகமைபெற்ற உணவு வடிவமைப்பாளர்கள்,
அனுபவம் பெற்ற விழா ஒருங்கிணைப்பாளர்கள்,
உங்கள் வைபவங்களை ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் நடத்துவதற்கு அங்கீகாரம் பெற்றவர்கள்.


உணவு வகைகள் 2.50 லிருந்து 80 பவுண்கள் வரை

80 South Road
Southall UB1 1RD
TEL: 020 8574 9209

எந்த ஒரு வைபவத்திற்கும் எங்கும், எவருக்கும் எங்கள் சேவை உண்டு
visit: www.palmpalace.co.uk

# Rainbow

MULTI CUISINE RESTAURANT & BAR
INDIAN, TANDOOR & SRILANKAN RESTAURANT



Free car parking
Fully Licenced
12 to 12 Bar
Takeaway Available
Live Music (Mon & Thu)
Cattering to all parties


TASTE OF SRI LANKAN INDIAN TAKE OUT AND CATERING

020 8574 4087

96A High Street Southall (Opp. to police station)
Middlesex

OPENING HOURS MON SUN 6PM 12MIDNIGHT AND CAR PARKING AVLAIBLE

TEENSபக்கம்






## Having an intelligent conversation with people with migration psychosis . . . you must be joking mate

Kumaran Jeyakody

I received lot of (hate) mail regarding my last issue's argument about assimilation. I decided to publish one of them on the Forum even though it is a bit silly to do so.

This is how it goes..

*The Editor, Oru Paper,*

*Please be good enough to publish my letter*

*Thank you.*

*D.S.Mark Andu.*

Hello Kumaran, it's no wonder that no aunty gave you any attention. Even their daughters will snub you! You are jealous of Shankar. May be you are frustrated and you have a serious problem, and hence is your philosophy and half- casts. Poor chap! You need urgent and intensive counselling.

Tamils are a great people and very proud of their traditions, culture and identity. They are very intelligent and industrious. Just see the great impact they have made since they came to live in the Western Countries some twenty years ago, for reasons beyond their control. They will simply ignore you.

Humans have a great quality of maintaining their identity. How about animals? If not for man's interference, they have always kept their identity and purity in spite of the fact that due to natural calamities they have migrated in large numbers, even to entirely new environments.

The great Italian writer Alberto Moravia, the author of La Romana (The Woman of Rome) said," if you fall in love with someone who doesn't belong to your community, jump any number of seas and get out of it".

*Durusha S.Mark - Andu*

Here we go... I thought. Some dude decided to go for personal attacks. This is exactly what happens when you try to have an intelligent conversation with Tamil people, I told myself.

Initially they do not understand the topic. When they don't understand the concepts and the arguments they become agitated and angry. Then they go for below the belt verbal diarrhoea usually using lot of words. They use some ancient Tamil philosopher's (in this particular dude's letter some poor Italian's I have never heard of) quote without timing or place. They still lose the plot. Then they become bitter and go all personal. Sometime they even become violent.

I guess most Tamils are educated fools. They get their education in order to make money and uplift themselves out of their palm huts of Vadamaratchi or where ever they come from. They never read anything for enjoyment or for knowledge. They go to some good educational institutions but learn just to serve. This is why even though there is sixty millions of them their land is governed by others.

My argument is, clinging on to an identity such as Tamil (a small and weak ethnic group in a powerful western nation) is pointless unless there is some advantage in doing so. Westerners use the fact that immigrants clinging to identities such as Tamils, Sinhalese etc in their own country to occupy moral high ground. It is the same as a rich man rescuing an exotic animal from its own but harsh habitat and keeping it in his own zoo in his own back garden and then showing off to his friends and getting all the kudos. The animal is so proud that he is exotic, in an alien habitat and serving his master and of course he is 'pure'.

If learning Bharata Natyam is an enjoyable past time to a Tamil child and if this is going to help her to get a place in Oxford, please do so by all means. But if you going to force a kid to learn this dance because his parents come from some little village in Jaffna and they want her to be "Tamil'..... then I say the parents should leave the child alone and they themselves take up Bharata Natyam (a lot of people take up salsa in their later days) even though it is going to be painful to watch.

I hope I will get some thought provoking and intelligent arguments next time.

# its obesity ... damn it!

GIVE A CHILD the choice between an apple and a bag of crisps and most kids will take the crisps. Repeat this with adults and a greater percentage will chose the apple because it is 'healthier'. But what if the apple and crisps had identical nutritional value? Would anyone still be reaching for the fruit?

The obesity epidemic has dominated the news in recent months. It is important to understand how we reached this dire situation. Why are chips nicer than broccoli? Why is a full-fat cheese and onion-dip tastier than the foul ultra-healthy equivalent? The answer is fat-humans like fat.


## Metabolism



The reason for this is largely evolutionary. In biochemistry we learn that metabolism of one gram of either protein or carbohydrate yields approximately four calories, but one gram of fat yields nice calories.

A high-fat diet will be a high-calorie diet and if you eat infrequently, rather than every day, a diet with a generous proportion of fat will provide vital energy. Eating once a week was normal for our ancestors. They couldn't pop out to Tesco or Burger King. Instead they picked up a spear and went hunting.

## Primitive Human



The primitive human brain learnt that survival depended on extracting as much energy as possible from occasional meals. The human brain learnt to like the taste of fat because a meal rich in fat would provide enough energy to sustain the body until the next meal. This evolutionary adaptation persists today but now we eat three times a day or more for many people and our brain tells us to opt for fatty foods every time.

The result is today's obesity epidemic. We need to highlight the evolutionary explanation of our preference for fat because we need to appreciate that obesity is not just a disease but also an addiction. Fat people are addicted




to consuming unhealthy foods in the same manner that smokers crave cigarettes.

And as with any addiction, these people have incredible difficulty combating their addiction- as with all addictions, the key is will power. As a society we have accepted that smokers and alcoholics have great difficulty ditching their vices and so we help, with support groups, cognitive therapy, behavioural therapy and pharmacological adjuncts.




With obesity the same approach is vital-30 minutes with a dietician or a quick word of advice from a time-pressured hospital doctor will never suffice. These patients require sustained positive reinforcement and counselling-the success of dieting groups is testament to this.



Only when we acknowledge that obesity is as much a consequence of addiction as of gluttony will we have correctly appreciated the aetiology of this ever-expanding problem-and therefore be in a position to offer cost-effective and beneficial treatment.

*Benoy Shah is a senior house office in medicine in Oxford.*


# Busted: The band



**Charlie**
**19 years old**
**AKA Poshboy**
**Lead singer and Guitar**



**James**
**20 years old**
**AKA Niceboy**
**Guitar and Singer**



**Matt**
**21 years old**
**AKA Wildboy**
**Guitar and Singer**

Rocky boyband Busted are the biggest thing in British pop, with 4 hit singles and a sell-out tour, they have now set their sights on the US.

They now have a band nibbling at their feet – McFly, but they don't care. "They're good mates, so we don't care if they're successful. We're still better!"

That's how good mates they are!

They also have a new TV series planned, like 'The Osbournes'. Charlie would be like Ozzy ("We've never heard someone swear and make it sound so posh!") and that's why he is called 'Poshboy' (and because he went to a private school!). Matt would be like Kelly as he is a Partyguy and that's why he is called 'Wildboy' (Kelly?!) You can probably guess why James is called 'Niceboy'!

1st Hit single – What I go to School for Nr.3 in the charts
2nd Hit single – Year 3000 Nr. 2 in the charts
3rd Hit single – You said No Nr.1 in the charts
4th Hit single – Thunderbirds are go/3am Nr.1 in the charts

*How they got together*

James and Matt started the band off and Charlie auditioned to be in the band (good choice, guys). James and Matt organise most things and write most of the songs.

*How the neighbours rate them*

They live in London and the neighbours don't really like them. But don't blame them, with loud parties going on everytime the boys are in would drive anyone mad.

**Now released**
Thunderbirds are go/3am
(Themesong for Thunderbirds the movie)

## Sleepy News

Did you know that an average person gets around 25 years of sleep in their life? Well now you know!



You will be disappointed if you fail, but you will be doomed if you don't try

## Dear Teens,

Now you have a page for yourselves why not send in your contribution of what you would like to see in the next issue. We would like you to send in your contributions to us, as well as your hobbies, interests and where you like going during your holidays.

**Thank You!**

Teens Paper
45b Crusoe Road
Mitcham, CR4 3LJ.

## The Burning Question

### What is really bothering us this fortnight

*Q: What is the greatest height a cat (let alone a catwoman) can fall without losing one of its lives?*

A: 'A cat is likely to survive a fall of any distance as their terminal velocity is half that of humans' according to the American Veterinary Medical Association. 'Strangely they are most likely to die if they fall from seven storeys, and less likely from heights above that. It is believed once they reach terminal velocity they relax, so when they hit, they are more likely to survive'.

## Top Ten Tips For Healthy Living

1. Eat a variety of nutrient-rich foods—ideally consume 40 different nutrients daily from a selection of grains, cereals, fruits, vegetables, dairy products, and meat, poultry, fish and other protein foods.

2. Enjoy plenty of whole grains (bread, rice, cereal and pasta), fruits and vegetables.

3. Maintain a healthy weight by exercising regularly.

4. Enjoy all food but eat moderate portions.

5. Eat meals regularly. Skipping meals can lead to out-of-control hunger often resulting in overeating.

6. Reduce, don't eliminate certain foods. Most people eat for pleasure as well as nutrition.

7. Balance your food choices over time. If you miss out on any food group one day, make up for it the next. Incorporate treat and snack foods into healthy diets by balancing with other foods.

8. Be aware of what you are eating and the vital nutrients you may be restricting in your diet.

9. Make changes to your diet gradually don't expect to totally revamp your eating habits overnight.

10. Foods are not good or bad. Select foods based on your total eating patterns. Eat foods in moderation, and choose foods to provide the balance and variety that are vital to good health.

# My best Birthday present

Sharon Arasaratnam

As I walked into the Reception area of 50 Queen Anne's Gate all I could think about was: I'm going to meet David Blunkett!

I went to the receptionist and said quietly: "I have an appointment with the Home Secretary."

She looked at me and asked: "What is your name?"

"Sharon. I'm here with my mum."

She checked the information given on the computer. She then went to get the visitors passes for us. They were red with a big 'V' on them.

"Could you fill in this questionnaire, please?" It was all about what I thought of the receptionist's work.

I just finished filling it in, which was about two minutes later, when a gentleman came down and asked: "Are you here to meet the Home Secretary?"

I nodded, unable to speak in excitement.

He took us upstairs to the ministerial waiting room and said that someone would be with us shortly.

The room was all light blue, the sofa, carpet and walls, and all it had in it was a little table and a glass cupboard. On the table were two books on India and some flowers. In the glass cupboard there were lots of different statues and one of them was a dragon.

Within two minutes of the gentleman leaving us the Senior Personal Secretary to the Home Secretary arrived and kept on apologising for being late.

She took us through a big room full of work places and then: There it was. The door to David Blunkett's room. She opened it and there he was walking towards us. The secretary said:" This is Sharon and her mum, Sir."

The atmosphere was very welcoming as the Home Secretary walked towards us to welcome us.

He then told us to take a seat. Just after we sat down another man came up and asked us what we would like to drink. We both said orange juice. Mr.Blunkett asked for a glass of water.

Then another man walked in to take Sadie, the guide-dog, for a walk. The drinks arrived.

The next question from Mr.Blunkett was: "How is your school work?" I told him that it was going fine and told him all about my school and my work. He said: "It must be a very good school if you travel that far and that early."

I was very surprised when he said: "I want to thank both of you for your help during the elections for London Mayor. It was very much appreciated."

I showed my school certificates I had taken with me to his secretary.

He gave me a good piece of advice: "Set up a career before you go into politics so you can always fall back to a job."

He then started to talk to my mum about a lot of different things. While he was talking to my mum I was talking to his secretary about the certificates she had just looked at and while I was talking to his secretary I took a good look at the Home secretary. David Blunkett is a man who knows mostly everything.

He is just the right height, had pinkish skin and was very clever. He said my name and my mum's name at least every minute.

He then got up and said: "I would like to have a bit more time to speak to you, but I have a debate at two o'clock and I have a lot to prepare for that."

I then asked if I might take pictures which he was happy to do. His secretary took a few. Just after the first two Sadie came back from her walk and I got a picture taken with her. We then left.

As we left I knew I had a lot to learn from this man. He is a very well informed man who knows what he is talking about.

When we got out the room I breathed with relief: I managed to stay calm in front of the Home Secretary!

His secretary then gave me his book 'David Blunkett- On a clear day'. She then took us downstairs and took our visitors passes.

As I got out the building I was probably the happiest person on earth. All I kept on thinking about was; I met David Blunkett and Sadie!

This has to be my best ever birthday present.

## Quiz Fire

1. Who is the Prime minister of Sri Lanka?
2. In what country is Berlin?
3. Which country won the 2004 European Championship (Football)?
4. Who is England's Cricket Captain?
5. What is Busted's latest song?

Answers:
1. Mahinda Rajapakse
2. Germany,
3. Greece,
4. Michael Vaughan
5. Thunderbirds are go/3am

# உலகவலம்

## அபின் உற்பத்தியின் உச்சத்தில் ஆப்கானிஸ்தான்



ஆப்கானிஸ்தானின் முன்னாள் (தலிபான்) ஆட்சியாளர்களின் மீது கூட்டுப்படைகள் தாக்குதல் தொடுத்தபோது, அங்கு விளைவிக்கப்பட்டு மேலை நாடுகளிற்கு கடத்தப்படும் அபினும் ஒரு காரணமாக கூறப்பட்டது. அபின் கடத்தலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியாவிட்டாலும், தலிபான்களை ஆட்சியிலிருந்து அகற்றுவதன்மூலம் கடத்தலை கட்டுப்படுத்தி விடலாம் எனக் கூறப்பட்டது, ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக, கூட்டுப்படைகளின் ஆதரவில் நடைபெறும் இடைக்கால அரச நிர்வாகத்தில், அபின் உற்பத்தி முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளாதாக பிரித்தானிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக இச்செய்தி, கூட்டுப்படைகளின் தாக்குதலுக்கு, அபின் உற்பத்தியையும், அதன் கடத்தலையையும் அல்கைதா பயங்கரவாதத்துக்கு அடுத்தபடியான காரணமாக கூறிவந்த பிரதமர் பிளேயருக்கு, பெருத்த அசௌகரியத்தை கொடுத்துள்ளது.

உண்மையில் தலிபான்களின் தீவிர மதவாத ஆட்சியில் அபின் உற்பத்தி பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.

பொப்பி வகை செடியிலிருந்து பெறப்படும் அபினிலிருந்து ஹெரோயின் என்ற போதைப்பொருள் தயாரிக்கப்படுகின்றது. பிரித்தானிய தெருக்களில் களவாக விற்கப்படும் 90 விழுக்காடு ஹெரோயின் ஆப்கானிஸ்தானிலிருந்தே கடத்தப்படுவதாக கூறியிருந்த பிரதமர் பிளேயர் தற்போதய உற்பத்தி அதிகரிப்பு சம்பந்தமாக எந்த கருத்தையும் வெளிவிடவில்லை. எனினும் இவ்வதிகரிப்பு பற்றி போதைப்பொருள் ஒளிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இது விலை வீழ்ச்சியையும் அதன் பயனாக போதைப்பொருள் பாவனையையும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது.

## மாவோயிச தீவிரவாதிகளின் நீதிமன்றங்கள்




ஆட்சி அதிகாரம் நிலை குலைந்துபோயுள்ள நேபாளத்தில், தமது செல்வாக்கிலுள்ள கிராமங்கள் தோறும் அரசுக்கிணையாக, நீதிமன்றங்களை மாவோயிச தீவிரவாதிகள் அமைத்து வருகிறார்கள். கங்காரு கோர்டஸ் என மேற்குலக ஊடகங்களால் வர்ணிக்கப்படும் இவ் நீதிமன்றங்கள் தம்மிடம் வரும் வழக்குகளை துரிதமாக விசாரித்து, தீர்ப்பு வழங்கி வருவதாகவும், கிராமத்தவர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேபாளத்திலுள்ள 75 மாவட்டங்களில் 25ல் இவ் நீதிமன்றங்கள் இயங்குவதாக நேபாளிய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. தீவிரவாதிகள் மீதான அச்சமே மக்களை இவ்நீதிமன்றங்களுக்கு செல்லத் தூண்டுவதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் நேபாளிய நீதித்துறை செல்வந்தர்களுக்கே துணைபுரிவதாக அரச பள்ளி ஆசிரியை ஒருவர் தெற்காசிய செய்தி நிறுவனமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அந்த ஆசிரியை மேலும் தெரிவிக்கையில் 'தீவிரவாதிகளின் நீதிபதிகள் ஒன்றும் சட்டவல்லுனர்கள் அல்ல, ஆனால் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வந்தவர்கள் என்றமையால் அவர்களால் நீதியான தீர்ப்பை வழங்க முடிகிறது. தீவிரவாதிகளின் எதிர் நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும் என்பதும் மக்களை சட்டத்தை மதித்து நடக்கத் தூண்டுகிறது என்றார்.

இந்நீதிமன்றுகள் பயிர்ச்செய்கை தொடர்பான சச்சரவுகளையும், கோழிக்களவு, ஆட்டுக்களவு மற்றும் சமூகப் பிரச்சனைகளையும விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன பொதுவாக பாதிப்புற்றவருக்கு இரட்டிப்பு நஸ்ட ஈடு வழங்குவது போன்றவை தண்டனைகளாக கொடுக்கப்படுகின்றது. உதாரணமாக கோழி ஒன்றை

ஒருவர் களவெடுத்ததாக காணப்படுமிடத்து, திருடியவர், உரிமையாளருக்கு இரண்டு கோழிகளை வழங்கவேண்டும்.

## டார்பரில் அரபு ஆயுதக்குழுக்களின் வெறியாட்டம்

உலகில் மிகவும் பாரதூரமான மனிதாபிமான பிரச்சனை சூடானின் வடமாநிலமான டார்பரில் ஏற்பட்டுள்ளது. டார்பரில் வசிக்கும் அரபு இனத்தவருக்கும் கறுப்பு ஆபிரிக்கர்களுக்கும் இடையிலான நிலப்பிரச்சனையே உள்நாட்டு யுத்தமாக தொடருகிறது.

சூடானிய அரசு அராபியர்களின் இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு துணை போவதாக குற்றம்சாட்டி வருவம் ஆபிரிக்கர்கள், அரசுக்கு எதிராக ஆயதமேந்தி போரிட்டு வருகின்றனர்.

ஆபிரிக்கர்களின் கிளர்ச்சிக் குழுக்களை அடக்குவதற்காக சூடானிய அரசினால் பாவிக்கப்படும் "ஜான்ஜாவீட்" அரபுக்கூலிக்குழுவே இம்மனித அவலத்துக்கு முக்கிய காரணமாக இருப்பதாக மேற்குலக ஊடகங்களும் மனிதவுரிமைக் குழுக்களும் தெரிவிக்கின்றன. ஜான்ஜாவீட், ஆயிரக்கணக்கில் கறுப்பின பெண்களை கடத்திச்சென்று, பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. செயலர் கோபிஅனான், அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின் பவல் போன்றோர் சூடானுக்கு பயணங்களை மேற்கொண்டு அரசுக்கு அழுத்தங்களை கொடுத்திருந்தபோதிலும், நிலமை கட்டுக்கடங்காமலே இருந்து வருகின்றது.

TIME TRAVEL & TOURS
...Service is our Life Style

Special rates for all HOTELS & Package Holidays to
SRI LANKA, MALDIVES, DUBAI & INDIA

Call now for the fares to COLOMBO
& ALL WORLDWIDE Destinations

COLOMBO - JAFFNA
Return £40 per person

ABTA
ATOL 4585
IATA

TIME Travel TOURS

209-210 Tooting High Street
020 8767 0000

432 Alexandra Avenue
Rayners Lane
020 8429 8333

136 Kenton Road
Harrow
020 8907 6969

WWW.UCANFLY.CO.UK FOR OFFERS WWW.UCANFLY.CO.UK/OFFERS

# கற்பூரம் காணாத கண் என்ன கண்ணே கதிரமலை ஏறாத கால் என்ன காலே



நல்லைக் கௌசிதகி

இலங்கையில் தமிழர்கள், மொழியால், பண்பாட்டால், பிரதேசத்தால், கலாச்சாரத்தால் மட்டும் பிரிக்கப்பட வேண்டியவர்களாய் அல்லது பிரிக்கப்பட்டவர்களாய் அமையவில்லை. தமது சமயவழிபாட்டாலும் பிரிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். இலங்கையில் தமிழர்களின் தொன்மை எந்தளவோ அத்துணைக்கும் தொன்மையானதும் அதனை வெளிப்படுத்துவதும் இந்து ஆலயங்களே. இந்த வகையில் கதிர்காமம், நையினா தீவு நாகபூசணி போன்ற ஆலயங்கள் எடுத்துக்காட்டானவை. நையினா தீவு நாகபூசணி அம்மன் வழிபாடு வரலாற்றுக்காலத்திற்கும் முற்பட்டது என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆதாரம் காட்டியுள்ளனர். கதிர்காமம் கந்த புராண இலக்கியம் முதலாக அதன் வரலாற்றுத்தொன்மை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்றும் ஈழத்தின் முருகவழிபாட்டிற்கெல்லாம் ஆதாரமாக மிக மிகத் தொன்மை பாராட்டுவதாக கதிர்காமம் உள்ளது.

இவை தவிர்த்த இந்து வழிபாட்டு தொல்பொருள் ஆதாரங்கள் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன புதை பொருள்கள் வெளிக்கொணரப்படாமலே போகின்றன. உதாரணத்திற்கு கந்தரோடையில் தாழிகளுக்கு கீழ் திராவிட ஆலயங்கள் உள்ளன என ஆய்வாளர்கள் வெளியிடத் தொடங்கியதும் அவ்வாய்வு இடை நிறுத்தப்பட்டு விகாரைகள் தாழிகளுக்கு மேல் கட்டப்பட்டு பௌத்தம் நிலை நிறுத்தப்பட்டது இவ்வாறு சொந்த மண்ணில் உரிமையில்லா நிலை தமிழ் இந்துக்களுக்கு.

புலம் பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் இந்துக்கள் தமது ஊர்தெய்வங்களின் பெயரால் கோயில்களும் கட்டி விழாக்களும் நடத்த இலங்கையிலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. பாரம்பரியம் மிக்க கதிர்காமம் சிங்களப் பண்பாட்டு முறைப்படி அவர்களின் நிர்வாகத்தின் கீழ் சென்றதனால் யாழ்பாணத்தில் தமிழர்கள் தமக்கென்று கதிர்காமத்தை உருவாக்கி உள்ளனர். கதிர் காமத்தின் பெயரால் இவ்வாலயத்தை அமைத்து அது போன்று சிறிதளவில் மலை முதலியன அமைத்து கதிர்காமத்தின் இளையது என்ற பொருளில் இதனை பாலகதிர்காமம் என்றழைக்கின்றனர். யாழ்பாணத்தின் மத்தியில் நல்லூரில் இந்த அருள்மிகு ஸ்ரீ பாலகிர்காமத்திற்கு 80, 90 களில் செல்ல முடியாத அடியவர்கள் இங்கு தமது. வழிபாடு களையும் நேர்த்திக்கடன்களையும் செய்யத்தொடங்கினர்

வழிபாட்டு மரபுகளும் திருவிழாக்களும் கூட கதிர்காம மரபை ஒத்தது. திருவிழாவும் கதிர்காம கொடியேற்றக் காலத்தில் ஆரம்பமாகி நிறைவு பெறும்.

அரோகர கோசத்துடன் கற்பூரச்சட்டி காவடி என்பன இறைவனுக்கு காட்டி பூசை நடைபெறும் பிரசாதமாக தேனும் தினை மாவுமே இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும். மூலாயத்திலிருந்து எழுந்தருளும் ஞானப் பொக்கிசமான யந்திரமே பதினைந்தடி உயரமுள்ள மரத்தாலான ஐராவத யானையில் வீதியுலாவாக வரும். உற்சவ முடிவில் ஆச்சாரியரும் அடியவரும் திருப்புகழ் முதலியன பாடி பஜனை செய்வார்கள். கதிர்காம உற்சவம் நிறைவு பெற்றதும் தமிழீழ ஆடிவேல் விழா நடைபெறும். மூன்று தினங்கள் யாழ் நகரனைத்தும் எம்பெருமான் பாலமுருகன் வலம் வருவார். இவ்வாடிவேல் இரதபவனியில் ஐராவத யானையில் பூரணநிறை குடமும், பின் வீரபாகு தேவர் முதலிய நவவீரர்களும் அதற்கடுத்த ஊர்தியில் மங்கள வாத்தியக் கலைஞர்களும், ஈற்றில் ஆடிவேல் முருகப்பெருமானுமாக வலம் வருவர். இவ் ஊர்வலப்பவனி. தமிழர் தம் வரலாற்றுப் பண்பாட்டுக் கோலங்களாகிய சில்லடி சிலம்படி தீப்பந்த வீர விளையாட்டு, பொம்மலாட்டம் காவடி கரகாட்டம் போன்றன இடம் பெறும்.

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்த்தானம் வெறுமனவே சமயவழிபாட்டுடன் மட்டும் நின்று விடாது பல சமூக சேவைகளையும், திட்டங்களையும் முன்வைத்து செயற்படுத்துகின்றது. இந்தவகையில் இளம் தலைமுறையினரை கோயிலுடன் ஈடுபடுத்த நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தொண்டர் படையை அமைத்து பயிற்சி அளிக்கிறது. பாலசம்ரக்ஷணா என்ற அமைப்பினூடாக சமயக்கல்வி, இசைத்துறை போன்ற வற்றில் பயிற்சியும், அவைக்காற்றுகை திறனையும் வெளிப்படுத்துகின்றது. உண்மையான அறிஞரை, கலைஞரை, நாட்டுப்பற்றாளரை தேர்ந்தெடுத்து ஆண்டு தோறும் சுகஸ்ரீ என்ற விருது வழங்கிக் கௌரவிக்கின்றது. இவை மட்டுமன்றி காணாமற் போனோர் குடும்பங்களுக்கும், போரின் வடுக்கள் படிந்தவர்களுக்கும் இத்தேவஸ்தானத்தினர் தம்மால் ஆன சேவைகளைச் செய்கின்றனர். இத்தனைக்கும் இவ்வாலயம் அளவில் மிகச்சிறியதாக இருந்தே இத்தனை காரியங்களையும் ஆற்றுகின்றது.

இம்மாதம் 17ம் தீகதி ஆரம்பமான இவ்வாலயத்தின் உற்சவமானது ஓகஸ்ட் மாதம் 1ம் திகதி தீர்தோற்சவத்துடன் நிறைவு பெற்று, பின் 2ம்,3ம்,4ம், திகதிகளில் தமிழீழ ஆடிவேல் உற்சவத்துடன் 2004 ஆண்டிற்கான மகோற்சவம் நிறைவு பெறும். ஈழம் சென்று இக்காலத்தில் வழிபட முடியாத நாம் இக்கட்டுரையை வாசித்து பாலமுருகனை மனக்கண் முன் நிறுத்தி வழிபடுவதன் மூலம் திருவிழாவில் பங்குபற்றிய பலனைப் பெறுவோமாக.

**கதிர்காமக் கந்தனுக்கு அரோகரா**

**பாலகதிர்காம சுவாமிக்கு அரோகரா**

NANDANA
BUILDERS

Extension

Central Heating & Plumbing

General Maintenance

Brick Works

5 Etongrow Ave.
Kingsbury, london
07946 334 599

Main agent for Qatar Airways
IATA
LinkAIR
Travels Limited
QATAR AIRWAYS القطرية
COLOMBO RETURN
£360 + tax
From 14th July to 30th August
Valid 1 month - Outbound Wed only
Please ring
020 8665 0206
www.linkair.co.uk
Linkair Travels Ltd, 361 London Road, Croydon CR0 3PB
TERMS & CONDITIONS APPLY

# கலை வளர்க்கும் பூனைகள்



சே. சந்திரவதனா

மண்டபம் நிறைந்திருந்தது. மேடையில் பரதம் நர்த்தனமாடியது. இளவட்டங்கள் கதிரைகளில் இருக்காமல் மண்டபத்தின் சுவரோரமாக நின்று நர்த்தனத்தையோ அல்லது நர்த்தகிகளையோ ரசித்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் இருக்கைகளை விட்டெழுந்து அங்குமிங்குமாக ஓடிக் கொண்டு திரிந்தார்கள்.

சுந்தரேசன் இந்தக் களேபரங்களுக்குள் மண்டபத்துள் அடங்கிப் போய் விடாமல் வெளியிலே நின்றார். அவர் அப்படித்தான். மண்டபத்துள் மனைவியின் அருகில் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை விட வெளியில் பெரிய மனுசத் தோரணையுடன் கன்ரீனிலோ... கசட் விற்கும் இடங்களிலோ... நின்றால்தான் நடனமாடி விட்டுப் போகும் பெண்களுடனோ அல்லது வெளியில் கன்ரீனில் சிற்றுண்டி வாங்க வரும் பெண்களுடனோ இரண்டு பகிடி விட்டுச் சிரிக்கலாம் என்பது அவருக்கு நன்கு தெரியும்.

அவர் இந்த விடயத்தில் படுகில்லாடி. இதொன்றும் அவரது மனைவி கோமதிக்குத் தெரியாமலில்லை. இளவயசிலேயே அவர் சபலபுத்திக்காரன்தான். கிளி மாதிரி அழகிய மனைவி கோமதியைப் பக்கத்தில் வைத்து விட்டுக் காகங்களைத் தேடிப் போய் வருவதில் அவருக்கு அலாதி திருப்தி.

இளமையில்தான் அப்படியென்றால் இப்ப வயசு ஐம்பதைத் தொட்ட பின்னும் நரைத்த மீசையை மளிச்சு விட்டுக் கொண்டு அலையோ அலை என்று அவர் அலைவதைப் பார்க்க கோமதிக்குப் பொல்லாத எரிச்சல் வரும்.

கோமதி சில சமயங்களில் மனசு பொறுக்காமல் - கலியாண வயசிலை பிள்ளையளை வைச்சுக் கொண்டு என்னப்பா கூத்தடிக்கிறிங்கள்...! கொஞ்சம்கூட வெக்கமாயில்லையோ உங்களுக்கு..? என்று பேசுவாள்.

உனக்கு......விசரடி! நான் ஒண்டும் நீ நினைக்கிற மாதிரி நடக்கேல்லை.....! -என்று கத்தி விட்டு, அவர் தன் வேலையை அலுக்காமல் சலிக்காமல் ஒவ்வொரு தமிழ் நிகழ்ச்சிகளிலும் தொடருவார். தன்ரை வயசுக்கு தன்னை யாரும் சந்தேகப் பட மாட்டார்கள் என்பதில் அவருக்கு அபார நம்பிக்கை.

அவரின் கெட்டித்தனம் என்னவென்றால் யார் யாருக்கெல்லாம் பருவ வயதில் பெண் பிள்ளைகள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் தனக்கு நட்பாக்கி விடுவார். அவர்களிடம்-அண்ணை நீங்கள்தான் எல்லாம். - என்பது மாதிரி நடந்து கொள்வார். அவர்கள் தன்னை விட வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் ஒரு அண்ணை போட்டு - பணிவு காட்டி மடக்கி விடுவார்.

அடுத்தது - புதிதாகத் திருமணத்துக்கென யாருக்காவது பெண் வந்தால் போதும். ஏதாவதொன்றைச் சாட்டிக் கொண்டு எடுத்ததுக் கெல்லாம் அவர்கள் வீட்டுக்குத்தான் ஓடுவார். போயிருந்து அந்த வீட்டுப் பெண்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதில் அவருக்கு அளவுக்கதிகமான ஆர்வம். அதற்காகவே அழகான பெண்கள், இளம் மனைவியர் இருக்கிற வீட்டு ஆண்களுடன் எல்லாம் அருமையான நண்பன் போல அழகாக நடிப்பார். அந்தப் பெண்களின் கண்களுக்கு அவர்கள் கணவன்மார்களை விடத் தான்தான் அழகாகத் தெரிவேன் என்பது அவரது முழுநம்பிக்கையும்! அவருக்குத் தன்னம்பிக்கை மிக அதிகம்.



இன்றும் கோமதி தனியேதான் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நினைவுகள் மட்டும் சுந்தரேசரோடு வெளியே நின்றது.

இம்முறை நிகழ்ச்சிக்கான மண்டபமும் அதற்குரிய கன்ரீனும் சுந்தரேசருக்கு மிகவும் வசதியாகவே அமைந்து விட்டது. வழமையான மண்டபங்களில் போல் வெளியாக இல்லாமல் கன்ரீனும் ஒரு அறையினுள். அதை அறையென்று சொல்வதை விட இருந்து சாப்பிடுவதற்கான இடமும் சேர்த்து பெரிதாகக் கட்டப் பட்டிருந்ததால் - ஹோல் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த ஹோலின் ஒரு மூலையை சேலைகளாலும் திரைச்சீலைகளாலும் மூடி மறைத்துத்தான் நிகழ்ச்சி தரும் பெண்கள் உடை மாற்றுவதற்கான அறை தற்காலிகமாகத் தயாரிக்கப் பட்டிருந்தது. கன்ரீனைக் கடந்துதான் அந்தத் தற்காலிக அறைக்குப் போக வேண்டும். இது போதும்தானே அவருக்கு.

ஒரேயடியாகக் கன்ரீனுக்குள் போய் பெரிய மனுசத் தோரணையுடன் ஒரு கரையாக இருந்து கதையளந்து கொண்டிருந்தார். கண்கள் மட்டும் இளம் பெண்களின் கண்களைச் சந்திப்பதிலேயே குறியாக இருந்தன. சுந்தரேசரின் வயதுக்கு யாரும் அவரைத் தப்பாக நினைக்க மாட்டார்கள். யாராவது இளம்பெடியள் கன்ரீனுக்குள் வந்தால்தான் கண்குத்திப் பாம்பாய் நின்று காவல் காப்பார்கள். இது சுந்தரேசர் போன்ற பூனைகளுக்கு வலு வசதி.

ரீன்ஏஜ்ஜில் காலடி வைக்கும் பெண் பிள்ளைகளின் பலவீனம் அவருக்கு நன்கு தெரியும். அதனால் அவர் அந்தப் பிள்ளைகளைக் கண்களால் தூண்டில் போட்டு சுலபமாக மடக்கி விடுவார். அதன் பின் அங்கிள் அங்கிள் என்று கொண்டு அந்தப் பிள்ளைகள் அவர் பின்னால் திரிவார்கள். ரீன்ஏஜ்ஜில் இருந்து வெளியே போகப் போகும் பெண்பிள்ளைகளுடன் இன்னொரு விதமான அணுகு முறை.

திருமணமான இளம்பெண்கள் என்றால் கணவன்மாருக்கு எந்த வித சந்தேகமும் ஏற்படாத வகையில் வேறொரு விதமான அணுகுமுறை.

திருமணமான பெண்களின் முன் - பெண்கள் கஷ்டப் பட்டாலே அவருக்கு மனசு தாங்காது என்பது போல அவர் நடத்தும் நாடகங்கள் கொஞ்ச நஞ்ச மல்ல. வீட்டில் கோமதியையே எல்லா வேலைகளையும் செய்ய விட்டு விட்டு ஊர் சுற்றும் அவர், மற்றைய பெண்களின் கணவன்மாருக்கு பெண்டாட்டிக்கு உதவிகள் செய்யும் படி புத்திமதி சொல்வார். இதனால் இதெல்லாம் அவரது நடிப்பு என்று தெரியாமலே அந்தப் பெண்கள் இவர் மேல் மதிப்பும் பிரியமும் வைத்து விடுவார்கள்:

மொத்தத்தில் அவர் உலகமறிந்த, உளவியல் புத்தகங்கள் எல்லாம் வாசித்து பெண்களின் பலவீனங்களைக் கற்றறிந்த புத்திசாலித்தனமான பூனை.

கோமதிக்கு வெளியில் சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத அவஸ்தை. எல்லாவற்றையும் விட்டிட்டு எங்காவது ஓடி விடுவோமா என்ற எரிச்சலான எண்ணம் அவளுள் அடிக்கடி எழும். ஆனால் ஓடிப் போனால் சுந்தரேசர் கதையை எப்படித் திருப்புவார் என்பதும் அவளுக்குத் தெரியும். சுந்தரேசர் சொல்வதைத்தான் ஊர் நம்பும். கோமதி வெளிநாட்டு மோகத்தில் கலாச்சாரம் பண்பாடு எல்லாவற்றையும் காற்றில் வீசி விட்டு ஓடி விட்டாள் என்றுதான் சமூகம் சொல்லும். அதனால் புயல் வீசும் மனசைப் பொறுமையால் காத்தாள்.

கோமதியின் இந்த ஊர் உலகத்துக்குப் பயந்த தன்மை கூட சுந்தரேசருக்குச் சாதகமாகவே அமைந்து விட்டது.

கோமதி மன உளைச்சலுடன் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் திரை மூடப்பட்டு -15 நிமிட இடைவேளை - அறிவிக்கப் பட்டது. எழுந்து வெளியில் போனாள். கன்ரீனுள் அவளுக்கு முன்னமே வெளியில் போய் விட்ட பெண்களும் ஆண்களும் குவிந்து நின்றார்கள். ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்ததால் கோமதியும் கும்பலோடு கும்பலாக கன்ரீன் முன் நின்றாள்.

சுந்தரேசர் இவளைக் கவனியாது மிகவும் சந்தோசமாக பிரசங்கம் வைத்துக் கொண்டிருந்தார்.

- எங்கடை கலையும் கலாச்சாரமும் அழியாமல் இருக்கோணுமெண்டால் நாங்கள் அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் வைக்க வேணும். எங்கடை கலையையும் கலாச்சாரத்தையும் வளர்க்க வேண்டியது தமிழர்களாகிய எங்களின்ரை கடமை..... இந்த நிகழ்ச்சியோடை நாங்கள் ஓய்ந்து போகக் கூடாது. முந்தி மாதிரி இப்பவெல்லாம் தமிழ் நிகழ்சிகளுக்கு வாற ஆக்களின்ரை தொகை குறைஞ்சு போட்டுதெண்டாலும் நாங்கள் ஓய்ந்து போகக் கூடாது. எங்கடை கலையை அழிய விடக் கூடாது. அடுத்த மாதம் அந்த நகரத்திலை.. அதற்கடுத்த மாதம் மற்றைய நகரத்திலை.... எண்டு எல்லா இடங்களிலையும் நடத்தோணும். உங்களுக்கு நிகழ்ச்சிகள் கிடைக்கிறது கஸ்டம் எண்டால் என்னட்டைச் சொல்லுங்கோ. நான் டான்ஸ் ரீச்சர்மாரோடை கதைச்சு உங்களுக்கு நிகழ்ச்சி எடுத்துத் தாறன்.

கோமதி எட்டிப் பார்த்தாள்.

கொஞ்சப் பேர் வாயைப்பிளந்தபடி அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுந்தரேசரின் வாய் பேசிக் கொண்டிருக்க, கண்களோ ஒரு டான்ஸ் ரீச்சரையும் பிள்ளைகளையும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

கோமதி ஒரு மாதிரி தண்ணியை வேண்டிக் கொண்டு வந்து தள்ளி நின்று கூட்டத்தைப் பார்த்தாள். நிகழ்ச்சி தரும் பிள்ளைகளை விட்டால் இளம் பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்ள மிகவும் சொற்பமானவர்களே நின்றார்கள். மிச்சமெல்லாம் வயது வந்தவர்கள்.

கலை வளர்ப்பும் கலாச்சார விழாவும் யாருக்காக நடக்கிறது. சுந்தரேசர் போன்ற.. பூனைகளுக்காகவா..? எழுந்த கேள்வியோடு மீண்டும் தன் இருக்கைக்கு நகர்ந்தாள்.

இனி ஒரு
விதி செய்வோம்
தனி ஒருவனுக்கு
ஒரு பேப்பர்
இல்லையெனில்
ஜெகத்தினையே
அழித்திடுவோம்.

ஒரு பேப்பர்
ORU PAPER
'ஒரு களம்'

# இழந்த உறவுகள்

## ஏழாலை, தமிழீழம்

ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் பொன்னம்மா 26-7-2004 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ் சென்றவர்களான கதிரிப்பிள்ளை சீதேவி தம்பதிகளின் அன்பு மகளும் தளையசிங்கத்தின் அன்பு மனைவியும் தனபாலசிங்கத்தின் அன்புத் தாயாரும் இராஜலக்சுமியின் அன்பு மாமியாரும் ஆவார். இவ்வறிவித்தல் குறித்த விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: பேரன் சிவறஞ்சன் (லண்டன்) 07930676808.

## அனலைதீவு, தமிழீழம்

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நவீந்திரன் வித்தியாதரன் கடந்த ஆடி மாதம் 18 ஆம் நாள் காலமானார்.

## வேலணை, தமிழீழம்

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நாகராசா கந்தசாமி கடந்த ஆடிமாதம் 13ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி நாகராசா இணையரது மகனும், பரமேஸ்வரி அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## கோப்பாய், தமிழீழம்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. உமாபரன் சபாபதிப்பிள்ளை கடந்த ஆடி மாதம் 09ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. சபாபதிப்பிள்ளை லீலாவதி இணையரது மகனும், கலைச்செல்வி அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## வல்வெட்டித்துறை, தமிழீழம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. தெய்வானைக்கண்டு கனகசபை கடந்த ஆடி மாதம் 10 ஆம் நாள் காலமானார். இவர் கனகசபை அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## நெடுந்தீவு, தமிழீழம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. அன்னமேரி மனுவேற்பிள்ளை கடந்த ஆடி மாதம் 13ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. வைத்திலிங்கம் சிவகாமிபிள்ளை இணையரது மகளும், மனுவேற்பிள்ளை அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## கட்டுடை, தமிழீழம்

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. டாக்டர் கனகரத்தினம் குகநேசன் கடந்த ஆடி மாதம் 08ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. கனகரத்தினம் மங்கையற்கரசி இணையரது மகனும் மாலினி அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## ஊரெழு, தமிழீழம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. கந்தையா கண்மணி கடந்த ஆடி மாதம் 10ஆம் நாள் கால மானார். இவர் திரு. திருமதி. கிருஸ்ணபிள்ளை அழகம்மா இணையரது மகளும் கந்தையா அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## கொழும்பு, சிறீலங்கா

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாலாம்பிகை பரமேஸ்வரன் கடந்த ஆடிமாதம் 14ஆம் நாள் காலமானார். இவர் பரமேஸ்வரன் அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## வேலணை, தமிழீழம்

லேணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. நாகநாதி இராசம்மா கடந்த ஆடி மாதம் 14ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. தம்பிப் பிள்ளை முத்துப்பிள்ளை இணையரது மகளும், நாகநாதி அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## கரணவாய், தமிழீழம்

கரணவாய், கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம் கடந்த ஆடி மாதம் 12 ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. சுப்பிரமணியம் சின்னம்மா இணையரது மகனும், பாக்கியம் அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## நெடுந்தீவு, தமிழீழம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. பத்மாவதி மோகனதாஸ் கடந்த ஆடி மாதம் 11ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. கந்தையா தில்லாத்தைபிள்ளை இணையரது மகளும், மோகனதாஸ் அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## சில்லாலை, தமிழீழம்

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு கபிரியேற்பிள்ளை ஆசீர்வாதம் கடந்த ஆடி மாதம் 21ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. ஆசீர்வாதம் இணையரது மகனும், ஐக்னேஸ் அம்மா அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## உடுவில், தமிழீழம்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. சுகிர்தரத்தினம் தியாகராஜா கடந்த ஆடி மாதம் 16ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. இரத்தினம் சிந்தாமணி இணையரது மகளும், தியாகராஜா அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

## புங்குடுதீவு, தமிழீழம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. கனகலெட்சுமி வில்வரெட்ணம் கடந்த ஆடி மாதம் 24ஆம் நாள் காலமானார். இவர் திரு. திருமதி. ஆறுமகம் நாகம்மா இணையரது மகளும், வில்வரெட்ணம் அவர்களது வாழ்க்கைத் துணைவரும் ஆவார்.

**இலவச சேவை!**

நீங்கள் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவுகள் யாராவது அண்மையில் காலம் ஆகி இருந்தால் அவற்றை எமக்கு அறிவியுங்கள். எம்மக்களின் நலன்கருதி இப்பகுதியில் அவ்வறிவித் தல்கள் இலவசமாகப் பிரசுரிக்கப் படும். விவரங்களை எழுதி அனுப்பவேண்டிய தொலைப்படி எண்: 020 8640 6972. தொலைபேசி எண்: 020 8640 4604

PREVE FOOD AND WINE

- உடன் மரக்கறி
- phone cards
- இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள்



உங்கள் அன்றாடத் தேவைகள் அனைத்திற்கும் நாடுங்கள்

834 london Road, Croydon,
Surrey, CR7 7PA

ஈழத்தமிழ் மக்களின் முதற்தமிழ் கடை லூசியத்தில் அமைந்திருக்கிறது

இங்கே... இலங்கை இந்திய மரக்கறிவகைகள், மீன் வகைகள், மாவகைகள், என்னெய்வகைகள், அரிசிவகைகள், பழவகைகள், கருவாடுகள், பாத்திரவகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் அபிசேகப்பொருட்கள், கிரிகைகளுக்குத் தேவையான தரமானபொருட்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதுடன் ஆங்கிலேய, கருபியன் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

EELAM SHOP
399 Lewisham High Street, Lewisham
020 8690 6545



ஸ்ரீ தேவி கருமாரி ஜோதிடம்



பரம்பரை வழி வந்த ஜோதிட வல்லுனரால்
ஜாதகம், எண்கணிதம், கைரேகை, முகநாடி
இவைகளை அம்பாளின் ஆசியுடன் கணித்து
சொல்லப்படும். குறைகள் இருப்பின்
பரிகாரங்களும் செய்யப்படும்.

ஜோதிட சக்கரவர்த்தி சக்தி பாலஜோசியர் அவர்கள்
இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்.

SRI LANKA FAMOUS ASTROLOGER SOLVE
ALL YOUR PROBLEMS

Light up your life.....
Today to a great extent

PRIOR APPOINTMENT WOULD BE APPRECIATED

ARULMIGU MEENAKSHI SUNTHARESWARAR
THIRUKOVIL (Wimbledon Sivan Temple)
100-106, Haydons Road, Wimbledon, London, SW19 1AW

Mobile: 079 569 358 16
Email: sakthi_sakthi@vsnl.com

SRI DEVI KARUMARI JOTHIDAM
7, Murrays Gate Road, Alwarpet, Chennai – 600 018 INDIA

# கவிதை

## என்ன சொல்ல நினைத்தாய்?



வாழ்வின் திசைகள்
நம் பிரிவை தீர்மானிக்கும்
அந்த இறுதியில்
என்னிடம் என்ன சொல்ல
நினைத்தாய்?

உனக்கும் எனக்கும்
இடையே ஒரு
வெற்றிடம் அமர்ந்து
நமது மௌனங்கள்
கைகோர்க்கும் அந்த
கடைசி நிமிடங்களில்
என்னிடம் என்ன சொல்ல
நினைத்தாய்?

பிரிவுவலி மறைக்க
சிரிப்பு முகமூடியணிந்து
என் எதிர்காலம் பற்றி கேட்ட
உன் சம்பிரதாய
கேள்விகளிடையே
என்னிடம் என்ன சொல்ல
நினைத்தாய்?

கடைக்கண்ணால் பார்த்தபடி
பேருந்தின்
கடைசிப்படிக்கட்டில் கால்வைக்கும்
கடைசி நிமிடத்தில்
என்னிடம் என்ன சொல்ல
நினைத்தாய்?

நகரும் பேருந்து
ஜன்னல் வெளியே
ஒற்றைப்பார்வை வீசி
உடன் முகம் திருப்பிய
அந்த ஒற்றை நொடியில்
என்னிடம் என்ன சொல்ல
நினைத்தாய்?

பாஷா

## சிங்களச் சித்திரவதைகளும் சீமைச் சித்திரவதைகளும்

கை குறைத்தல் கால் குறைத்தல்
மெய் நடுங்க நகம் பிடுங்கல்
தண்ணீர்க்குள் தலை அமிழ்த்தல்
மண் கிடங்கில் தாட்டு வைத்தல்
கொதி நீரில் குளிப்பாட்டல்
எரி நெருப்பில் நடக்க வைத்தல்
குண்டூசி குதி ஏற்றிக்
குறட்டாலே விரல் நசித்தல்
மின்சாரம் மிகப் பாய்ச்சி
நெஞ்சீரம் வற்ற வைத்தல்
சம்சாரம் தனைக் கிடத்திக்
கண்முன்னே கற்பழித்தல்
மின்சாரக் கம்பத்தில்
தலை கீழாய்த் தொங்கவிடல்
இருக்க இடமில்லாத
இருட்டறையில் பூட்டி வைத்தல்
காற்றற்ற நாற்றறையில்
காற்றின்றித் திணற வைத்தல்
தண்ணீ(ர்) வெந்நீ(ர்) இல்லாமல்
தாகத்தால் தவிக்கவிடல்

உண்ணக் கொடுக்காமல்
உருக்குலைந்து சாகவிடல்
இவையெல்லாம் சிங்களத்தார்
சுவை இன்றி நம்மவர்க்குச்
சுவைப்பதற்குத் தந்தவைகள்!
தமிழர் சிலர் இலண்டனிலே
தருகின்றார் சில 'வதைகள்'
குமிழ் முள்ளுப் போலெம்மைக்
குத்திக் குடைகிறது!
பால் பல்லும் வீழாத
பாலகரை வயப்படுத்திப்
படியெடா சங்கீதம்
பாடெடா பாட்டென்று
பாலகரைப் பிழிந்தெடுத்து
முடியுங்கள் "சிலபசை" நீர்
மூன்றாண்டிற் குள்ளென்று
குருவுக்கும் உருவேற்றி
குரு மறுத்தால் தமிழ்நாட்டின்
குரு ஒன்றைத் தருவித்து
விறுவிறென்று கொதிப்பித்து

பல்லாயிரம் பவுண்கள்
பாழடிக்கும் அரங்கேற்ற
விழா ஒன்றை நிச்சயித்து
தெரிந்த தெரியாத
சங்கீதம் தெரியாத
இங்கிதங்கள் புரியாத
வெள்ளை கறுப்பென்று
எல்லோர்க்கும் அழைப்பனுப்பிக்
கூடி இருப்போர்கள்
கொட்டாவி விடும் வரைக்கும்
தங் குடும்பச் சிறப்பெல்லாம்
அடுக்கடுக்காய் உரைக்கவைத்துப்
பல்லோர்முன் பாலகனைப்
பரிசுகெட வைப்பதைப்போல்
பாட வைக்கும் அரங்கேற்றம்
பார்ப்பதைப் போல் மிகக்கொடிய
சித்திரவதையும் உண்டோ?
சிந்தித்துப் பார்த்திரோ?

- செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

## கல்லறைக் காதல்



மாறாத என்னிதயம் – மாதவி
உனை கண்டு மாறியது
மண நாளொன்றை
எண்ணுமுன்பே– மங்கை
நீ மாறி விட்டாய்
மணந்தவனை மறந்திடாதே
மறைகிறேன் நான் மண்ணுக்குள்

– கிருஷ்ணசாமி நித்தியானந்தன்.

## மனிதன்.... ஓர் சுயநல விலங்கு

அடிக்கடி உணர்த்துவான்
குணத்தால் செயலால். . .!
வார்த்தைகள் விளாசுவான்
விசமங்கள் விதைக்கப்படும். . .!
காரியம் ஆற்றுவான்
கறுமங்கள் களைகட்டும். . .!
பார்க்கப் பழகுவான்
பார்வைகள் பாழ்படும். . .!
நேசங்கள் அவனுக்கு
புரியாத மொழிகள். . .!
வேசங்கள் அவனுக்கு
வேத போதனைகள். . .!
மெய்யாக அவனைத் தேடினால்
மெய் மட்டும் நிஜம்
மற்றெல்லாம் போலி. . .!

## புலம் பெயர்ந்து புகலிடம் தேடிய உறவுகளே!



புலம்பெயர்ந்து புகலீடம் தேடிய
உறவுகளே!

புதுமையாகச் சிந்திக்கப் பழகிக்
கொள்ளுங்கள்!

பொங்கலொடு புதுவருடம்,
விழாக்களென வந்துற்றால்

அங்கமெலாம் தங்கநகை ஆடை
அலங்காரம்

ஆடம்பரக் கோலமதில்
ஆண்டவனை நாடுதலால்

தங்கிடுமா தலைவனவன்
தாட்சண்யம் எம்மீது?

சார்ந்திடுமா? தர்மம்தான்
காத்திடுமா எம்வாழ்வை?

எங்கும் நிறைந்தவன்! எளிமையின்
இருப்பிடம்!

ஏழைகள் இதயமே இறைவனின்
உறைவிடம்!

மாற்றுடைக்கும் வழியின்றி
மாதரங்கே தவிக்கின்றார்!

மானமது காத்திடத்
துண்டுச்சேலைக் கலைகின்றார்!

ஊற்றெடுக்கும் விழிநீரின்
உவர்சுவை மட்டுமன்றி

ஊனுணவின் உருசிதனை
ஒருகணமும் அறிந்திலார்!

உமதன்பைக் காட்டிடுவீர்!
உதவிக்கரம் நீட்டிடுவீர்!

தமதுநலன் அனைத்தையும்
தமிழீழ அன்னைக்காய்த்

தாரை வார்த்திட்ட தங்கப்
பொக்கிசங்கள்!

சுமந்துநிற்கும் துயரனைத்தும்
தூரவே விலகிடச்

சுத்தமான உளம்கொண்டு
துடைத்திட முன் வந்திடுவீர்!

பகலவன்தன் கதிரொளியைப்
பாரெங்கும் பரப்புகின்றான்!

பலனேதும் எதிர்பார்த்தா
பரிதியிவன் உதிக்கின்றான்?

அகிலமெங்கும் ஒளிவீசும்
அழகு நிலாக்கூட

உறவுமுறை தனைக்கருதி
உலாவரு தில்லையே!

முகிற்கூட்டம் மட்டுமென்ன?
ஒன்றையொன்று மோதி

மழைநீராய்த் தனையழித்து
மாநிலத்திற் பொழிகிறது!

மகத்தான வாழ்வுபெற்ற மானிடர்
நாம்மட்டும்

மனம்குறுகி மௌனித்து
வாழ்தல்தான் தகுமோ?

- பவித்திரா

வீடியோ,
நிழல் படப்பிடிப்புகள்

TAMIL VISION
020 8540 3251

உங்கள் விளம்பரங்கள்

உங்கள் விளம்பரங்கள்
ஒரு பேப்பரில்!

அழையுங்கள் :
020 8640 4604

ஆங்கிலம் பேசுவோம்

வியாபார விடயங்களில் ஆங்கிலம் பேச.
வேலைத்தலங்களில் உங்கள் உத்தியோக தரத்தினை உயர்த்த.
ஆங்கிலம் சரளமாக பேச.
பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களின் உதவியுடன்.
ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகளுக்கு: பாலா 020 8640 4604

வரவிருக்கும் படங்கள்: ஆட்டோகிராப் மானஸ்தன் ஏறுமுகம் திலக் நீ மட்டும் காதல் சரிகம ஜெய்ராம் பேரழகன்

ttn



02081000000 அருள் குத்து கண்களால் கைது செய் கில்லி ஜோர்

## நிகழ்ச்சி நிரல் 07 ஒகஸ்ட் - 13 ஒகஸ்ட் வரை

### சனி

07.00 மங்கள வாத்தியம்
07:30 அரும்புகள்
08:00 சைவநிகழ்ச்சி
08:30 புலரும் பொழுது புலரும்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 அப்பா வாரம்
12:30 பார்தேன் பகர்ந்தேன்
13:00 ஹொலிவூட் நேரம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**47 நாட்கள்**
16:30 வெள்ளித்திரை
17:00 நாடி, நலவாழ்வு
17:30 வண்ணச்சிறகடித்து
18:00 குண்டக்கா மண்டக்கா
18:30 தாயக வலம்
19:00 கோலிவூட் பார்வை
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 நையாண்டி மேளம்
21:30 திரைவிருந்து
**பரசுராம் (புதுப்படம்)**
அர்ஜுன் - கிரண்



### ஞாயிறு

07.00 இசையருவி
07:30 அரும்புகள்
08:00 கிறிஸ்தவ நிகழ்ச்சி
08:30 விளையாட்டு
09:30 ஒளிக்கீற்று
10:30 வணக்கம் ஐரோப்பா
11:00 தாயகவலம்
11:30 புதினக்கண்ணாடி
12:00 நாவூற வாயூற
12:30 முளைவிடும்பதியன்
13:00 திரைமுகம்
13:30 செய்தி நேரம்
14:00உலகத் தமிழர் மாநாடு
16:30 திரையிசை வரிசை
17:00 விடுதலைப் பண்கள்
17:30 ஓவியா
18:00 படலைக்குப் படலை
18:30 ஒளித்தடம் (குறும்படம்)
19:00 வைத்தியலிங்கம் ஷோ
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 சுப்பர்மடம்
21:30 திரைவிருந்து
**கிழக்கு வீதி**



### திங்கள்

07.00 மங்கள வாத்தியம்
07:30 யோகாசனம்
08:00 புத்தம் புதுக்காலை
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சித்திரம் பேசுதடி
11:00 என்றென்றும் புன்னகை
11:30 தாயகவலம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்**
16:30 நேருக்கு நேர்
17:00 கலைச்சரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 கணினி விழிகள்
21:30 திரைவிருந்து
**தங்கப்பதக்கம்**



### செவ்வாய்

07.00 காலைக் கலசம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 வெள்ளித்திரை
11:00 வைத்தியலிங்கம் ஷோ
11:30 ஹொலிவூட்நேரம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**ஏலக்கடை ஏழுமலை**
16:30 புதினக் கண்ணாடி
17:00 நினைவலைகள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 தாயகவலம்
22:00 எட்டாதகொப்பு
23:00 செய்திக் கண்ணோட்டம்



### புதன்

07.00 காலைக் கலசம்
07:30 யோகாசனம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 நேருக்கு நேர்
11:00 நாடி
11:30 நையாண்டி மேளம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**அபூர்வராகங்கள்**
16:30 முளைவிடும் பதியன்
17:00 கலைமுற்றம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விழிகள்
21:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
22:00 ஆடுகளம்
23:00 திசைகள் எத்தனை



### வியாழன்

07:00 மங்கள வாத்தியம்
07:30 யோகாசனம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சந்திப்போம்சிந்திப்போம்
11:00 என்றென்றும் புன்னகை
11:30 சுப்பர் மடம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**சீவலப்பேரி பாண்டி**
16:30 பார்த்தேன் பகர்ந்தேன்
17:00 உளவியலும் நாங்களும்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலை பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 விளையாட்டு
22:00 மறக்கத்தகுமோ
23:00 சித்திரம் பேசுதடி
23:30 இரவின் தாலாட்டு



### வெள்ளி

07.00 காலைக் கலசம்
07:30 யோகாசனம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
11:00 திரைமுகம்
11:30 படலைக்குப் படலை
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**என் உயிர்க் கண்ணம்மா**
16:30 ஒளித்தடம் (குறும்படம்)
17:00 ஜேர்மன் நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விளையாட்டு 2004
21:30 திரைவிருந்து
**சுந்தர காண்டம்**



## நிகழ்ச்சி நிரல் 14 ஒகஸ்ட் - 20 ஒகஸ்ட் வரை

### சனி

07.00 மங்கள வாத்தியம்
07:30 அரும்புகள்
08:00 சைவநிகழ்ச்சி
08:30 புலரும் பொழுது புலரும்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 அப்பா வாரம்
12:30 பார்தேன் பகர்ந்தேன்
13:00 ஹொலிவூட் நேரம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**சிந்து பைரவி**
16:30 வெள்ளித்திரை
17:00 நலவாழ்வு
17:30 வண்ணச்சிறகடித்து
18:00 குண்டக்கா மண்டக்கா
18:30 தாயக வலம்
19:00 கோலிவூட் பார்வை
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 நையாண்டி மேளம்
21:30 திரைவிருந்து
**கண்களால் கைது செய்**
(புதுப்படம்)



### ஞாயிறு

07.00 இசையருவி
07:30 அரும்புகள்
08:00 கிறிஸ்தவ நிகழ்ச்சி
08:30 விளையாட்டு
09:30 ஒளிக்கீற்று
10:30 வணக்கம் ஐரோப்பா
11:00 தாயகவலம்
11:30 புதினக்கண்ணாடி
12:00 நாவூற வாயூற
12:30 முளைவிடும்பதியன்
13:00 திரைமுகம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**ஏழுமலை**
16:30 திரையிசை வரிசை
17:00 விடுதலைப் பண்கள்
17:30 ஓவியா
18:00 படலைக்குப் படலை
18:30 ஒளித்தடம் (குறும்படம்)
19:00 வைத்தியலிங்கம் ஷோ
19:30 கதிரவன்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 சுப்பர்மடம்
21:30 திரைவிருந்து
**அன்புள்ள ரஜனிகாந்**



### திங்கள்

07.00 மங்கள வாத்தியம்
07:30 யோகாசனம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சித்திரம் பேசுதடி
11:00 என்றென்றும் புன்னகை
11:30 தாயகவலம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**பெரிய இடத்துப்பெண்**
16:30 நேருக்கு நேர்
17:00 கலைச்சரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 கணனி விழிகள்
21:30 திரைவிருந்து
**நீ சிரித்தால் தீபாவளி**



### செவ்வாய்

07.00 காலைக் கலசம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 வெள்ளித்திரை
11:00 வைத்தியலிங்கம் ஷோ
11:30 ஹொலிவூட் நேரம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**பாடும் வானம்பாடி**
16:30 புதினக் கண்ணாடி
17:00 நினைவலைகள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 தாயகவலம்
22:00 எட்டாதகொப்பு
23:00 செய்திக் கண்ணோட்டம்



### புதன்

07.00 காலைக் கலசம்
07:30 யோகாசனம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 நேருக்கு நேர்
11:00 நாடி
11:30 நையாண்டி மேளம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**சோட்டு சீட்டு கண்ணாடி**
16:30 முளைவிடும் பதியன்
17:00 கலைமுற்றம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விழிகள்
21:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
22:00 ஆடுகளம்



### வியாழன்

07.00 மங்கள வாத்தியம்
07:30 யோகாசனம்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சந்திப்போம் சிந்திப்போம்
11:00 என்றென்றும் புன்னகை
11:30 சுப்பர் மடம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**மனசுக்கேத்தமகராசா**
16:30 பார்த்தேன் பகர்ந்தேன்
17:00 உளவியலும் நாங்களும்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 அத்தை
21:30 விளையாட்டு
22:00 மறக்கத்தகுமோ
23:00 சித்திரம் பேசுதடி
23:30 இரவின் தாலாட்டு



### வெள்ளி

07.00 காலைக் கலசம்
07:30 யோகாசனம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
11:00 திரைமுகம்
11:30 படலைக்குப் படலை
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 பஞ்சமி
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து
**கோடி கண்மணி**
16:30 ஒளித்தடம் (குறும்படம்)
17:00 ஜேர்மன் நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 அப்பா
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 விளையாட்டு 2004
21:30 திரைவிருந்து
**தமிழ்**



நிகழ்ச்சி நேரங்கள் யாவும் ஐரோப்பிய நேரத்தின்படியே வழங்கப்பட்டுள்ளது

நிகழ்ச்சிகளில் நேர மாற்றங்கள் முன் அறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

## சிறுகதை

# பிஞ்சு மனம்

நளினி மகேந்திரன்

பாடசாலை விடுமுறை எனவே நிசா நீண்ட நேரம் படுத்திருந்தாள். இப்ப டீவீயில நல்ல புரோகிராமுகள் போகும். ஆனா இன்னும் அம்மாவும் அப்பாவும் எழும்பேல்ல. இப்ப நான் டீவியப் போட சத்தங் கேட்டு அம்மா எழும்பினாண்டா என்ர கதி அதோ கதிதான். நான் மற்ற நாளையில டேக்கெயருக்கெண்டு போறதால எனக்கு உந்தப் புரொகிராம் எல்லாம் பார்க்கக் கிடைக்கிறேல்லத்தானே. சத்தத்தக் குறைச்சு மெல்லமாப் பார்த்தாலென்ன? ஐயோ வேண்டாம் இப்பிடித்தானே அன்றைக்கு நான் பார்த்துக்கொண்டிருக்க அம்மா எழும்பி வந்து கத்திப் போட்டு அன்டைக்கு முழுக்க என்ன டீவி பாக்கவே விடேல்ல. நான் மற்றக் கிட்ஸப் போல தேவையில்லாத புரொகிராம்சே பாக்கிறன். இது ஏன் அம்மாக்குத் தெரியுதில்ல. அம்மாட கத்தல விட பேசாமப் படுத்திருப்பம். என்று குப்புறப் படுத்துக் கொண்டாள் நிசா. அவளிடமிருந்து ஒரு ஏக்கப் பெருமூச்சு வெளிப்பட்டது. நிசா கண்களை மூடினாள். நித்திரை வர மறுத்தது. அவள் தன் பெற்றோர் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தாள்.

முன்வீட்டு ரெபேக்காவிடம் இருப்பது போல ஒரு barbie doll வாங்கித்தரச்சொல்லி நேற்று நான் அப்பாட்ட கேட்டன். அதுகும் நானா கேக்கேல்ல. அப்பா என்ன மடியில தூக்கி கொஞ்ச நேரம் வைத்திருந்தவர். அப்பத்தான் என்ன வேணும் என்ட நிசாக் குஞ்சுக்கு என்றார். அப்ப நான் barbie doll என்டன். அதில என்ன பிழை. அம்மாக்கு சரியான கோவம் வந்திட்டுது. இடுப்பில கையையும் வைச்சுக்கொண்டு வந்து ஓமோம் நீங்கள் அவளுக்கு நல்லாச் செல்லம் குடுங்கோ. கண்டது நிண்டதுகளையெல்லாம் வாங்கிக் காசக் கரியாக்குங்கோ. அங்க அதுகள் ஊர்ல படுற கஸ்டங்கள நினைச்சாத்தானே. அப்பா பாவம் பேசாமல் இருந்துவிட்டார். ஏன் அம்மா இப்பிடி கத்துறா? ரெண்டு பேரும் வேலைக்குப் போகினம்தானே. யார் யாருக்கோ பிறந்தநாள் எண்டோண்ண அவளுக்கு அது விருப்பம் இது விருப்பம் அது அவனிட்ட கிடக்கு இத வாங்குவம் இது நல்ல வடிவாக்கிடக்கு என்று எடுப்பினம்.

அப்பா ஏதும் அது விலையாக் கிடக்கு வேற எடுப்பம் என்டா அம்மாக்கு கோவம் வரும். என்னப்பா விலை குறைஞ்சதில வாங்கினா அதுகள் எங்களப்பற்றி என்ன நினைக்குங்கள் என்பா. முந்தியெல்லாம் யாருக்கும் toys வாங்கப் போனா எனக்கும் வேணும் என்று அழுவன் அம்மாவின் அதட்டலுடன் நான் அடங்கிப் போவன். இல்லாட்டி பிறகு வரேக்க வாங்குவம் என்பார்கள். அது என்னை ஏமாற்ற.

நாள் போகப் போக நான் எதுவுமே கேட்கிறேல்ல. கேட்டால் வீட்டிலயே விட்டுட்டுப் போயிடுவினம். அப்ப எனக்கு கடையில இருக்கிற டொயிசத்தன்னும் தொட்டு விளையாட முடியாமக் கூடப் போயிடும்தானே.

யாரும் ஏதும் கொண்டு வந்தா ஆக்களுக்கு முன்னால வைச்சு உடைக்கக் கூடாதாம். அன்டைக்கு இப்பிடித்தான் அன்டன் அங்கிளாக்கள் என்ர பிறந்தநாளுக்கென்டு வடிவான பேப்பர்ல சுத்தி ஏதோ கொண்டு வந்திருந்தினம். எனக்கெண்டா எப்ப உடைப்பன் என்டிருந்தது. ஆனா அம்மா என்னைப் பாத்து உடைக்கக் கூடா என்று கண்ணைக் காட்டினா. நானும் எப்ப அவையள் போவினம் என்று பாத்துக்கொண்டிருந்தன். அவையள் போன உடன ஒரே ஓட்டமாப் போய் அத எடுத்து உடைக்கத் தொடங்கினன். அது ஒரு வடிவான கார். அம்மா உவள் பெட்டைக்கென்னத்துக்குக் கார். உத உப்பிடியே பக்குவமா வை. யாருக்கேன் குடுக்கலாம் என்றா. சொன்னாப்போல நாளைக்கு என்ர friend வீட்ட லஞ்சுக்குப் போகேக்க அவட மகனுக்கு ஏதேன் வாங்கத்தானே வேணும் சொல்லிக்கொண்டே அதை வாங்கி எனக்கு எட்டாத தூரத்தில வைச்சிட்டா. நான் அழுதால் இரண்டு அடி கிடைக்கும் அதவிட பேசாம இருக்கலாம். நிசாவின் கண்கள் கலங்கின. அந்தக் காரை ஏக்கத்துடன் பார்த்தாள்.

ரெபேக்கா அதுநான் முன்வீட்டில் இருக்கிற கேள் இப்ப என்ன செய்வாளாயிருக்கும். அவளுக்கென்ன எத்தின toys இருக்கு டீவி பாத்தாக் கூட அவட அம்மா ஒன்றுமே சொல்லமாட்டா. அன்டைக்கு நான் போகைக்க அவட அம்மா ரெபேக்காக்கு தலை வாரிக்கொண்டிருந்தா. ஒரு பெரிய பெட்டி நிறைய விதம் விதமான கிளிப்புகள் ரிபன்கள் இன்னும் என்னென்னவோ எல்லாம் கிடக்கு அவள் கொடுத்து வைச்சவள். ரெபேக்கா என்னப் போல நேரத்திற்கு எழும்பவும் தேவையில்ல. அவக்கு விளையாட தங்கையும் வேற இருக்கிறா. எனக்கும் அக்கா இருக்கிறா தான். ஆனா அவ என்னவிடப் பெரியவ. அவவிற்கு என்னோட விளையாட நேரம் இல்ல. அநேகமா எங்கட அன்டி வீட்டில தான் அவ இருப்பா. அவவின்ட பழைய உடுப்பெல்லாம் அம்மா பக்குவமா வைச்சு எனக்குத் தருவா. அன்டைக்கு ரெபேக்கா வீட்ட நான் போனபோது



ரெபேக்கா ஓடி ஓடிக் கொண்டிருந்தாள். அவள் அம்மாவும் அவள் பின்னால ஓடினாள் ஏனென்டா ரெபேக்காட தலைய வடிவா இழுத்து கட்டத்தான். பின் ரெபேக்காவைப் பிடித்துவிட்டாள். அவளை கட்டிப்பிடித்து அவள் கன்னங்களிலே விடாமல் கொஞ்சினாள். முதல்ல தலையெல்லாம் வடிவாக் கட்டினாப் பிறகு நாங்க விளையாடுவோமாம் என்றாள். என்ட அம்மாவ நினைச்சுப் பாத்தன். ஏய் நிசா இங்க வா உந்தத் தலைய இழுத்துக் கட்டக் கூடாதே பார் எப்பிடி இருக்கென்று. உதுக்கு. உனக்கென்ன வயது காணாதே. போ போ போய் கட்டு. எனக்கு நிறைய வேலை கிடக்கு என்பா. எப்போதாவது அம்மா கட்டத் தொடங்கினால் சிறிதும் ஆட்டக் கூடாது. சிறிது ஆட்டினாலும் தலைல ஒரு குட்டு உடன தந்திடுவா. படுக்கையிலிருந்தபடியே

தன்னைச் சுதாகரித்தபடி நிமிர்ந்தாள். என்னடி யோசின உடுப்ப மாத்தி தலைய இழுத்துக் கொண்டு சாப்பிட வா என்றார். அம்மாவைப் அப்படியே பார்த்தபடி இருந்தாள் நிசா. அவள் மனம் கூறியது இவ்வளவு கத்துறாவே நான் சின்னப் பிள்ளா எனக்கு உந்த உயரத்தில உடுப்பு எட்டாது என்று ஏன் விளங்கேல்ல. என்னடி அபபிடிப் பாக்கிற உந்த முறைக்கிற பழக்கத்த விட்டுடு சரியே மீண்டும் உறுமல். நிசா மெதுவாகத் தன் உடைகளைக் கழற்றத் தொடங்கினாள். அம்மா போகப் போனாள். அம்மா என்றாள் நிசா மெதுவாக. என்ன என்று கத்திய படி திரும்பினாள் அம்மா. எந்தச் சட்டை போடுறது. என்று தயங்கினாள் நிசா. உடைகளை எடுத்து கட்டிலின் மேலெறிந்த அம்மா உந்த வீட்டில எல்லாம் நான் தான் செய்ய வேணும் எனப் புறுபுறுத்தபடியே

கத்தியபடியே இருந்தார். உவளுக்கு ஒருக்காச் சொன்னாக் கேட்க மாட்டாள் பொம்பிளப் பிள்ள பழகுறா பழக்கம் என புறுபுறுத்துக் கொண்டு வேறு இருந்தா. ஏன் ஒருக்கா வந்து என்ற தலையத் தடவி நிசாம்மா எழும்பு என்று சொல்லக் கூடாதே. ஒருக்கா என்னக் கொஞ்சி விடக் கூடவா அவவிற்கு நேரமில்லை. ஏதோ நினைத்தவளாக நிசா மெல்ல எழுந்து போய்ச் சோபாவிலே அமர்ந்தாள். நானென்ன டீவிய இப்ப போட்டனானே ஏன் இந்தக் கத்தல். பேசாமல் முகங் கழுவப் போனாள் நிசா. அறைக்குள் வந்தவள் தன் உடைகள் யாவும் உயரத்திலிருந்தன. எட்டிப் பார்த்தாள். எட்டவில்லை. அம்மாவக் கூப்பிட்டா கத்துவா. என்ன செய்யலாம்? என்று யோசித்தபடியே கட்டிலில் அப்படியே அமர்ந்து விட்டாள். நிசா என்ற அதட்டல் அவளைத் திடுக்கிட வைத்தது.

நாள் போகப் போக நான் எதுவுமே கேட்கிறேல்ல. கேட்டால் வீட்டிலயே விட்டுட்டுப் போயிடுவினம். அப்ப எனக்கு கடையில இருக்கிற டொயிசத்தன்னும் தொட்டு விளையாட முடியாமக் கூடப் போயிடும்தானே.

பலவற்றையும் யோசித்துக் கொண்டிருந்தாள் நிசா. கிச்சினிற்குள்ள சத்தம் கேட்குது. அப்பா எழும்பிட்டார் போல. கண்களை இறுக மூடிக் கொண்டாள். யாரோ கதவைத் திறக்கினம். ஆ, போட்டினம் போல. மெல்லக் கண்களை திறந்து பாத்தாள். யாருமில்லை. இந்தா.. யாரோடையோ சத்தங் கேட்குது. அது அம்மாவாத்தான் இருக்கும். நிசா எழும்பேல்லயே எழும்பி முகத்தக் கழுவிப் போட்டு வாவன்.

இது அம்மா தான். அம்மா போட்டா. இப்ப எழும்பியும் என்னத்த செய்யிறது? என நினைத்தவள் மறுபுறம் திரும்பிப் படுத்தாள். அம்மாவும் அடிக்கடி நிசா எழும்பன் என்று போய் விட்டாள். ரெபேக்கான்ட அம்மா என்டா ரெபேக்காக்கு முகங் கழுவி சட்டையெல்லாம் போட்டு தலையிழுத்து சாப்பாடு தீத்தியெல்லாம் விடுவா. ஏன் என்ட அம்மாக்கு ஏலாது?

மெல்ல வெளியே போனாள் நிசா. மேசையில் பட்டர் பூசின பாணும் ஆறின பாலும் கிடந்தது. பார்க்கவே பிடிக்கவேயில்லை. மெல்ல மெல்ல விஸ்லாங்கமாகச் சாப்பிட்டாள். முடியவில்லை. இதற்குமேல் முடியாது. மெல்லப் பாலைக் குடித்தாள். பால் நன்கு ஆறியிருந்தது. நிசாவின் கண்களிலிருந்து கண்ணீர் ஒழுகியது. ஏன் எனக்குப் பிடித்த சாப்பாடு செய்து தர இவர்களால் முடியவில்லை. ரெபேக்காவின் அம்மா என்ன என்ன சாப்பாடெல்லாம் விதம் விதமா செய்து தாறா. சாப்பிடேக்க எத்தின கதையெல்லாம் சொல்லுவா. சாப்பாடு செய்ய முதல் என்ன வேணும் என்றாவது கேட்கக் கூடாதாஎன்ன? உனக்குச் சாப்பாடு தாற தென்டா பெரிய பாடுதான். சாப்பிட ஏலாட்டிப் போ போய் உன்ர அறைய துப்பரவாக்கு என்றார் அம்மா. ரெபேக்கான்ற அம்மா தான் ரெபேக்கான்ற அறையெல்லாம் சரி செய்யிறவ. இங்க நான் தான் செய்யவேண்டியிருக்கு. என மனதிற்குள் நினைத்தபடியே எல்லாவற்றையும் சரி செய்தாள்.

பின் ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள். நிசா நானும் அப்பாவும் ஒருக்கா உதில கடைக்குப் போட்டு வாறம் வீட்டில கவனமா இரு என்ன. யாரும் கதவத்தட்டினா திறக்கக் கூடாது என்ன? ஏன் என்னை ரெபேக்கா வீட்டில விட்டுட்டுப் போகலாம் தானே. கேட்கப் பயமாக இருந்தது நிசாவிற்கு. பேசாமல் இருந்தாள்.

கதவு சாத்தியது தான் தாமதம் டிவியைப் போட்டுவிட்டு சுதந்திரமாக இருந்து பார்த்தாள். பசித்தது. சாப்பிட ஒன்றுமில்லை. நேரம் பன்னிரண்டாகியதால் டீவியையும் விட்டுவிட்டு வந்து படுத்தாள். நன்றாகத் தூங்கிவிட்டாள்.

அவள் தலையை யாரோ வருடுவது தெரிந்தது. அது அப்பாவாத்தான் இருக்கும். மெல்லக் கண்களைத் திறந்தாள். நெற்றியிலே முத்தமிட்டபடி சாப்பிட வாங்கோ என்ர நிசாக்குஞ்சு என்றார். அப்படியே அவர் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டாள் நிசா. பின் தன்னிரு கைகளையும் தூக்குமாறு நீட்டினாள். அப்படியே தூக்கிக் கொண்டு போனார் அப்பா. அப்பா நல்லவர். அவருக்கு என்னோட விளையாட எல்லாம் நல்ல விருப்பம். ஆனா அவருக்கு நேரமில்ல. அம்மாக்கென்டா நிறைய நேரமிருக்கு. ஆனா சமயல் எந்த நேரமும் காதுக்க டெலிபோன். இல்லாலாட்டி தன்ற சினேகிதி வீட்ட என்று போயிடுவா. என்னோட மினக்கெட அவவிற்கு எங்கே நேரம். மனதிற்குள் பலவற்றையும் நினைத்துப் பார்த்தபடியே அப்பாவின் தோளிலே சாய்ந்து படுத்தபடி கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டாள். அப்பாவுடன் சாப்பிடப் போனாள் நிசா. அப்பாவிடம் சாப்பாட்டைக் குழைத்து தீத்தி விடும்படி கேட்டாள். ஓகே ஓகே ஆனா எல்லாத்தையும் சாப்பிட வேணுமாம் என்றபடி அப்பா தலையசைத்தார். நல்லாச் செல்லங் குடுங்கோ. உவளுக்கு எட்டுவயதாகுது இன்னும் தீத்திக் கொண்டிருங்கோ வேற வேலையில்லாம. எதற்கெடுத்தாலும் பொம்பிளைப்பிள்ள அவளச் செல்லங் குடுத்துக் கெடுக்காதையுங்கோ என்றுதான் பேசுறா. ஏன் ரெபேக்காவும் பொம்பிளப் பிள்ள தானே.

மறுநாள் நிசா அப்பா அம்மாவுடன் அம்மாவின் friend வீட்ட சாப்பாட்டிற்குப் போனாள். அங்கே அவள் வயதில் மாலி இருந்தாள். நிசா அவளுடன் விளையாடினாள். தனது காரையும் மாலியின் தம்பி வைத்து விளையாடினான். தானும் அதை எடுத்து விளையாடினாள். மாலியிடம் பல barbie dollகள் இருந்தன. நிசா ஒவ்வொன்றையும் ஏக்கத்துடன் எடுத்துப் பார்த்தாள்.

மாலி யார் உங்களுக்கு இதெல்லாம் வாங்கித்தாறது என்றாள் நிசா. அதற்கு மாலியோ என்ற மம்மியும் டடியும் தான். அன்று என் அம்மா மாலியையும் அவள் தம்பியையும் எத்தனை தரம் மாறி மாறித் தூக்கியிருப்பா. நான் கேட்டா. . ம். . எதற்கு இதெல்லாம் விட்டு விடுவோம்.

வீட்டிற்கு வரும்போதோ நிசாவின் மனம் மிகவும் பாதிப்படைந்திருந்தது. காரணம் அவள் போன வீட்டில் தாராளமாக நிறைய விளையாட்டுச் சாமான்கள் கிடக்கு அப்படியிருந்தும் தன்ர அம்மா தனது காரையும் அவர்களுக்கே கொடுத்துவிட்டாளே என்ற ஆதங்கம் தான். பாவம் அந்தப் பிஞ்சு மனம் எதற்காக ஏங்கித் தவிக்க வேண்டும்?

## இதற்கு யார் காரணம்?

# அறுவைப் பக்கம்

## கடிக்க . . .

**கிருஸ்சாந்தன்**

நீங்க ஒரு பல்லு டாக்டரா?
இல்லை நான் முப்பத்திரண்டு பல்லுக்கும் டாக்டர்.

புல்லு சாப்பிட்டா நல்லா கண்ணு தெரியுமா?
ஏன் இப்படி ஒரு சந்தேகம்
ஏனென்றால் ஒரு மாடும் கண்ணாடி
போடுவதில்லையே.
நீ போட்டிருக்கிறியே.

கமல் மீசை இல்லாம நடிச்ச முதல் படம் எது?
களத்தூர் கண்ணம்மா.

போட்டோகிராஃ தொழிலில் முன்னேற அவசியமானது திறமையா அதிஸ்ரமா.
இரண்டும் இல்லை கமராதான்.

சட்டை புதுசா இருக்கு தீபாவளிக்கு எடுத்தார்களா?
இல்லை எனக்கு எடுத்தது.

குழந்தை பிறப்பு வீதத்தை கட்டுப்படுத்த
அரசு என்ன செய்யச் சொல்கிறது?
ஒன்றும் செய்ய வேண்டாம் என்கிறது

என்னுடைய நாய் காணாமல் போய்விட்டது
பேப்பரில் விளம்பரம் கொடுத்தால் என்ன?
என் நாய்க்கு எழுதப் படிக்க தெரியாது

உங்க ஊரில் யாராவது பெரிய மனிதர்கள் பிறந்திருக்கிறார்களா?
இல்லை எங்கள் ஊரில் எல்லோரும் குழந்தைகளாகத்தான் பிறந்தார்கள்

## சாமி மாமியை சின்னக் கலைவாணர் விவேக் சந்தித்து பேட்டியெடுத்தால். . .

**விவேக்:** வணக்கம் மாமி. ஸாரி மேடம். நீங்க ஒல்லியா இருந்தாலும் நடிப்புல கில்லியா இருக்கீங்க. இந்த சொத்தைய ஐ மீன் வித்தைய எங்க கத்துக்கிட்டீங்கனு கொஞ்சம் தமிழ்ல சொல்லமுடியுமா?

**த்ரிஷா:** ஆக்சுவலி...(முடிப்பதங்கு முன் குறுக்கிடுகிறார் விவேக்)

**விவேக்:** ஆக்சுவலி... தலைவலி எல்லாம் தேவையா? அதுதான் வாங்கி கட்டிக்கிட்டீங்கள்ல. அப்புறமென்ன? ஆக்சுவலியை வுட்டுட்டு. தமிழ்..தமிழ்..

**த்ரிஷா:** ஓ.கே.. ஓ.கே.. தமிழ்லேயே பேசுறேன் நான் நடிக்க வந்ததே ஒரு விபத்துன்னே சொல்லணும்.

**விவேக்:** அப்படின்னா...தயாரிப்பாளர் யாராவது உங்க மீது காரை ஓட்டிட்டாங்களா? இல்ல நீங்க தயாரிப்பாளர் மீது மோதிட்டீங்களா?

**த்ரிஷா:** நான் அப்படி சொல்ல வரல. சினிமாவிற்கு வந்தது தற்செயலான சம்பவம்னு சொல்ல வந்தேன்.

**விவேக்:** ஓ.கே ஒரு முக்கியமான மேட்டரு. உடம்ப இவ்வளவு மெலிசா சீவி வச்சுருக்கீங்களே. ஸாரி.. ஸாரி.. சீரா வச்சுக்கீங்களே தயாரிப்பாளர் செலவுல எதுவும் சாப்பிடுறது இல்லையா?

**த்ரிஷா:** நான் ஒரு சாப்பாட்டு பிரியை. எல்லோரும் மூணு வேளை சாப்பிடுவாங்கன்னா நான் ஐந்து வேளை சாப்பிடுவேன். மெடிட்டேஷன் உடற்பயிற்சின்னு பாடியை மெயின்டெய்ன் பண்றேன். அதான் நான் ஸ்லிம்மா இருக்கிறதுக்கு காரணம்.

**விவேக்:** இதுக்கு பேரு ஸ்லிம் இல்ல. அம்புட்டும் வினை மாதிரி தெரியுது

**த்ரிஷா:** என்ன சொன்னீங்க?

**விவேக்:** ஒண்ணுமில்ல உங்க குரல் வீணை வாசிக்கிறது மாதிரி இருக்குன்னு சொல்ல வந்தேன். டங்க் ஸ்லிப்பாகி வினைன்னு சொல்லி விட்டேன். . உங்களுக்கு சாமி பிடிக்குமா? நான் கேக்குறது விக்ரம் இல்ல...தெய்வம்

**த்ரிஷா:** ம்ம்ம் கண்டிப்பா. நானும் தீவிர சாமி பக்தைதான்.

**விவேக்:** சிம்ரன் சீட்ட நீங்க பிடிச்சுட்டாதா நினைக்கிறீங்களா?

**த்ரிஷா:** நான் எப்போதும் யார் இடத்தையும் பிடிக்கணும்னு நினைக்கலை. அவரவர்கள் இடம் அவரவர்களுக்கு.

**விவேக்:** இந்த மேட்டர கடைசி வரை ஞாபகம் வச்சுக்க நிறைய வல்லாரை சாப்பிடுங்க. இல்லைன்னா உங்களுக்கு சீட்டே இருக்காது. அப்புறம் நான் வந்து ரொம்ப நேரமாச்சு. இன்னும் கொஞ்சம் லேட்டானா என்னோட சீட்ட கிழிச்சிருவாங்க மாமி அப்ப நான் வரட்டுமா?




லண்டனில் ஒரு தமிழ் கடையில் குளிர்பானம் வாங்கி குடித்தோம் அந்த போத்தலில் கலாவதியாகும் திகதி இருக்கவில்லை ஏன் இப்படி என்று வினியோகஸ்தரை கேட்கச் சொன்னோம். கடைக்காரரும் கேட்டு இருக்கிறார், அவர்கள் 'அதுக்கென்ன ஒரு டேட்ரை போட்டுத்தரலாம்'. என்றார்களாம்.

கமலக்கண்ணன்

■ ■ ■

டிஸ்கவரி சனல் பார்த்தா எனக்கெப்பவும் றோகான்ர ஞாபகம் தான் வரும் யுராசிக் பார்க் படம் வந்த சமயம் நானும் அவனும் படம் பார்க்க போனோம் அந்தப் பெரிய மிருகம் அவனை சரியா பயப்படுத்திப் போட்டுது படத்தில டைனோசர் வருகிற கட்டங்களில் எல்லாம் அவன் இருக்கைக்கு கீழே ஒளிந்து கொண்டு இருந்தான். டேய் இது சினிமாதானே எண்டு அவனுக்கு ஏச, அவன் இது சினிமா எண்டு எங்களுக்கு தெரியும் டைனோசருக்கு தெரியாதே என்று சொன்னான் தாங்க முடிய வில்லை.

பா.சுரேஸ்

■ ■ ■

கடந்த சில ஆண்டுகளாக மக்கள் மிகுந்த விரக்தி அடைந்த நிலையில் இருப்பதாக நாசா விண்வெளி நிலயம் ஆராய்சி முடிவொன்றினை அறிவித்துள்ளது. அதனால் தான் மக்கள் குடி குடியை கெடுக்கும், புகைத்தல் உடலுக்கு கேடு விளைவிக்கும் என்றும் தெரிந்து இருந்தும் அவற்றை பயன்படுத்துகிறார்கள் என்று அந்நிறுவனம் கவலை தெரிவிக்கிறது இதனால் இறப்பு வீதம் அதிகரிக்கும் எனவும் ஒட்டுப் போடும் வாக்காளர்களின் எண்ணிக்கை அடியோடு குறையலாம் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

கா.தீபன்

■ ■ ■

சங்கிலியன் மண்டபம் கட்டினான் பண்டார வன்னியன் கோயில் கட்டினான் எங்கண்ட அவயள் வேட்டி கட்டிச்சினம் நாங்கள் சேலை' கட்டினோம். இண்டைக்கு எல்லாம் மாறிப்போச்சு ஆனால் நாங்க மட்டும் சீலையைத்தான் கட்டோணுமாம் வேறே ஏதாவதெண்டா சுடிதார் பஞ்சாபிதானாம் ஏனென்டா அதுகள் எங்கட கலை கலாச்சார விழுமியங்களாம். ஆனா அவயள் இப்ப கிழிஞ்ச ரவுசர் பெனியன் என்று வெளுத்து வாங்கினம். தலையை எலி அரிச்சமாதிரி எல்லாம் வெட்டினம் உவைக்கு வேற கலாச்சாரமோ என்று லண்டன் தமிழ் மகளிர் சீலைச் சங்கம் விசனம் தெரிவிக்கிறது.

சண்.கனகரதி

■ ■ ■

பாக்கியமக்காட கதை இருக்கிதே ஐயோ தாங்க முடியவில்லை ஒருநாள் அக்கா கடைத்தெருவில் கார்ல போய் இருக்கிறா (அவோண்ட மூத்தவரோட) குறுக்கால ஒரு வெள்ளை பாஞ்சிருக்கிறான். மனிசி பதறிப்போய் ஏடே தம்பி! எண்டு கத்தி இருக்குது, வெள்ளை விடுதே? Pakki எண்டிருக்குது. மனிசிக்கு சந்தோசம் என்ரபேர் உவனுக் கெப்படித் தெரியும் எண்டு. வெள்ளை பிறகு ஏதோ சொல்ல எங்கண்ட காரை Parking பண்ணச் சொல்லுறான் தம்பி எண்டிருக்கிறா?

க.ரவி

■ ■ ■

அண்மையில் விம்பிள்டன் பக்கமாக 'Fashion Show' ஒன்று நடந்திருக்கிறது பல்லாயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்து இருக்கிறார்கள். பார்வையாளர்கள் மிகக்குறைந்த அளவிலேயே காணப்பட்டார்கள். இடையில் அடைமழை வந்து கெடுத்து விடக்கூடாதென்று நிகழ்ச்சி நடத்தினவர்களை விட கலந்துகொண்டவர்களே கடவுளை வேண்டிக் கொண்டு இருந்தார்களாம். திருமுகங்கள் வெறுமுகங்கள் ஆகாமல் இருக்க.

தா.சேந்தன்

■ ■ ■

### இவர்கள் திரைப்படம் எடுத்தால் எப்படி இருக்கும்?

பேக்கரிக் கடைக்காரர்:
உன்னிடத்தில் பன்னைக் கொடுத்தேன்

சைக்கிள் கடைக்காரர்:
காற்றடிக்க நேரமில்லை

போலிஸ்காரர்:
கைகளால் கைது செய்

புகைப்படகாரர்:
போட்டோகிராப்

பால்க்காரர்:
கண்ணுபோடபோகுதய்யா

துப்பிட்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றேல்லாம் நுவனீர் அவர்ஸ்
வேலை செய்து சோத்து மாடாய் போவார்.

## சினித்துளி

### ஐரோப்பிய விழா விருமாண்டிக்கு விருது

வட கொரியாவில் நடைபெறும் ஐரோப்பிய படவிழாவில் கமல்ஹாசனின் விருமாண்டி சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. கம்யுனிஸ ஆட்சியில் இருக்கும் வட கொரியாவில் நடைபெறும் ஐரோப்பிய படவிழாவில் கலந்து கொள்வதற்காக கடந்த வாரம் கமல் அங்கு சென்றார். பெரும்பாலும் வெளிநாட்டு பட விழாக்களில் விருதுகள் எல்லாம் விழா தினத்தன்றுதான் அறிவிக்கப்படும். விழாவில் விருமாண்டி படம் திரையிடப்பட்டு விழா தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோது அந்த இனிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. விழாவில் திரையிடப்பட்ட படங்களில் சிறந்த படமாக விருமாண்டி தேர்வு செய்யப்பட்டது. கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு, நடிப்பு என பல துறைகளில் கமல் ஒருவரே கலக்கியிருப்பதை விழாவுக்குவந்திருந்த அனைவரும் சிலாகித்துப்பாராட்டியிருக்கிறார்கள்.விருது வாங்கிய குஷியோடு கமல் சுவிட்ஸர்லாந்து செல்கிறார்.



### வாஸ்து எனக்கு தோஸ்து - விவேக்



திரையில் நல்லவர்களாக தோன்றுகிறவர்கள் எல்லாம் நல்லவர்களுமல்ல. தீயவர்களெல்லாம் தீயவர்களுமல்ல. திரையில் புரட்சி வசனம் பேசுகிறவர்கள், வெளியே பொய்யும் புரட்டுமாக திரிவது சர்வசாதாரணம். விவேக்கும் இதற்கு விதிவிலக்கல்ல.பகுத்தறிவு கருத்துக்களை பரப்புகிறேன் என்று ஜோதிடம், வாஸ்து என்று சகல சம்பிரதாய நம்பிக்கைகளையும் நக்கல் செய்வது விவேக்கின் ஸ்பெஷாலிட்டி. ஏதோ நல்ல கருத்து சொல்றாரே என்று ரசிகர்கள் நிமிர்ந்து உட்கார, அடடா, நம்ம வாய்சுக்கு இவ்வளவு மதிப்பா என்று அதே ரூட்டில் சென்று சினிமாவில் நல்லதொரு இடத்துக்கும் வந்துவிட்டார். யாரும் கொடுக்காமலே தன்னை சின்னக் கலைவாணராக்கிக் கொண்டார் இந்த காமெடி கிங்.இப்போது தான் சம்பாதித்த பணத்தில் வீடு கட்டி வருகிறார் விவேக். சொந்த வீடு. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடுமல்லவா? வீட்டிற்கும், அதில் குடியிருக்கப் போகும் தன் குடும்பத்திற்கும் ஏதும் நேராமலிருக்க, வாஸ்து சாஸ்திரப்படி வீட்டை கட்டி வருகிறார். திரையில் வாஸ்து பார்க்கிறவர்களுக்கு எதிராக இந்த போடு போட்டு விட்டு, எப்படி இவரால் வாஸ்து சாஸ்திரப்படி வீடுகட்ட தோன்றியது என்று யோசிக்கிறீர்களா? கவுண்டமணி பாணியில் சொல்வதானால், சினிமாவுல இதெல்லாம் சகஜமப்பா.

### ஷாக்- ஷாக் அடிக்குது


நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழில் வரும் திகில் படம் ஷாக். அத்துடன் பிரசாந்துக்கும் பெரிய இடைவெளிக்குப் பிறகு உருப்படியாக ஒரு படமாகவும் அமைந்துள்ளது. ராம்கோபாலின் பூத் இந்திப் படத்தை தமிழ்ப்படுத்தியிருப்பவர் பிரசாந்தின் தந்தை இயக்குனர் தியாகராஜன்.

பிரசாந்த் தன் இளம் மனைவி மீனாவுடன் ஒரு 12 மாடிக்கட்டிடத்துக்கு குடிவருகிறார். அந்த பிளாட்டில் ஏற்கனவே குடியிருந்த மஞ்சு என்ற பெண் 7 வயது மகனுடன் பால்கனியிலிருந்து குதித்து தற்கொலை செய்த விவகாரம் பிரசாந்துக்கு தெரிந்தும் அதை உதாசீனப்படுத்துகிறார். வேலைக்காரி மூலம் மீனாவுக்கு பேய் பிடித்துள்ளதை புரிந்துகொள்கிறார். பேய் விரட்ட சுகாசினியை அழைத்து வர, இறந்தப்போன மஞ்சு பற்றி பல மர்மங்கள் தெரியவருகின்றன. (பேய்) மஞ்சுவிடமிருந்து எப்படி மீனா விடுவிக்கப்படுகிறார் என்பதுமீதிக்கதை. சாதாரண வில்லன் பாத்திரத்தில் அப்பாஸ் நடித்திருப்பது பரிதாபம். எம்.பி.




பன்னீர்செல்வத்தின் ஒளிப்பதிவும் சலீம் சுலைமானின் பின்னணி இசையும் படத்துக்கு ப்ளஸ் பாயிண்ட்ஸ். கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பு, இயக்கம் என பல வேலைகளையும் பொறுப்பாகவே செய்திருக்கிறார் தியாகராஜன். ஷாக் அடிக்கத்தான் செய்கிறது.

### எம்.பி.பி.எஸ்.ல் கருணாஸ்



வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். படத்தில் கமலுடன் சேர்ந்து காமெடி செய்கிறார் கருணாஸ். நான் சினிமாவுக்கு வந்தது என்னோட வாழ்க்கையில ஒரு பெரிய மாற்றம்னா, கமல் சாரோட நடிக்க வாய்ப்பு கிடைச்சது எனக்கு கிடைத்த மிகப் பெரிய மறுமலர்ச்சி என்கிறார் நெகிழ்ச்சியுடன். இந்தப் படத்தில் கமலுடன் இரண்டுபேர் அவரது நண்பர்களாக நடிக்கிறார்கள். ஒருவர் பிரபு. இன்னொருவர் கருணாஸ். படத்தில் கமலுக்கென்று சில பன்ச் டயலாக்குகளை இயக்குனர் சரண் வைத்து இருக்கிறார். படத்தின் பாடல்கள் அனைத்தும் நன்றாக இருந்தாலும், கலக்கப் போறது யாருங்கிற பாட்டுதான் டாப் என்கிறார் கருணாஸ். இந்தப்பாட்டுல கமல்சார் நொறுக்கித் தள்ளியிருக்கிறார். ஊருபூரா இந்தப் பாட்டை பாடப் போறாங்க. கமலுடன் நடித்தப் பிறகுதான் நடிப்புப்பற்றி பல விஷயங்கள் கருணாசுக்கு தெரிய வந்ததாம். கமல் ஒரு பல்கலைக்கழகம் என்பது கருணாஸின் கமெண்ட். நடிப்பை பத்தி எனக்கு பாட்டு புத்தகம் அளவுக்கு தான் தெரியும். ஆனால் கமல் சாரோ பைபிள் சைசுக்கு, ஏன் அதை விட அதிகமாகவே தெரிஞ்சு வச்சிருக்கிறார் - கருணாஸின் குரலில் வியப்பு!




## போட்டுத்தாக்குது –பாரன்ஹிட் 9/11

**அருண் வைத்தியநாதன்**

அமெரிக்கா முழுவதும் ஸ்டீவன் ஸ்பீல்பர்க்கின் டெர்மினலையும், பென் ஸ்டில்லர் நடித்திருக்கும் டாட்ஜ் பால் என்ற நகைச்சுவைப்படத்தையும் தாண்டி, ஒரு விவரணப்படம் வசூலிலும் மற்றும் பரபரப்பில் கலக்கித் தள்ளுகிறது என்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும். மைக்கேல் மூரின் பாரன்ஹிட் 9/11 தான் அந்தப் பெருமைக்குரிய படம்.

அமெரிக்க அதிபர் புஷ்ஷில் ஆரம்பித்து, துணை அதிபர் டிக் செய்னி மற்றும் காலின்பாவல் வரை, மேக் அப் செய்து கொள்வதில் இருந்து படம் ஆரம்பிக்கிறது. (எல்லாம் உண்மையான காட்சிகள் ..தொலைக்காட்சிக்கு உரை நிகழ்த்துவதற்கு முன்னால் தான் இந்த மேக் அப் சமாச்சாரங்கள்) அமெரிக்க அதிபர் புஷ் தேர்தலில் தோற்றும் ஜெயித்த கதையில் தொடங்கி, புஷ்ஷுக்கும் சவுதி எண்ணெய் அதிபர்களுக்கும் உள்ள உறவு வரை மைக்கேல் மூர் வறுத்தெடுக்கிறார்.

ஈராக்கிய பெண்மணி தனது குடும்பத்தில் உள்ள ஐவரை இழந்து விட்டு, கதறும் காட்சி ஆங்கில எழுத்துக்களுடன் ஓடும் போது, மனசு லேசாகி விடுகிறது. போர் என்பது எத்தகைய கொடூரமான விஷயம், அதுவும் எந்த வித ஆதாரமுமில்லாமல், பொய்களின் காரணத்தால் ஜோடிக்கப்பட்ட போர் என்பது எத்தனை கேவலமான விஷமம் என்பது பளாரென்று அறைந்த வண்ணம் நமக்கு உணர்த்தப்படுகிறது. ஒஸாமா பின்லேடனின் உறவினர்களுக்கு மட்டும் தனி விமானம் கொடுக்கப்பட்டு, செப் 13 ஆம் தேதி பத்திரமாக அமெரிக்க அரசாங்கமே அனுப்பி வைப்பதைப் புட்டு புட்டு வைக்கிறார் மைக்கேல்.

மைக்கேல் என்ற இளம் வயது ராணுவ வீரர், அவரது தாய்க்கு எழுதிய கடிதத்தை, அவரது தாயார் கண்ணீர் மல்கப் படித்துக் காட்டுகிறார். சில வரிகளைப் படிக்கும் போது, அவரின் குரல் விம்முகிறது. அம்மா... இந்தப் பாலைவனத்தில் நான் எதற்காக துப்பாக்கியோடு இன்னமும் நின்று கொண்டிருக்கிறேன் என்று தெரியவில்லை. தயவு செய்து, அடுத்த முறை புஷ்ஷிற்கு வாக்களிக்காதீர்கள் என்ற வேண்டுகோளும் நடுவில் வருகிறது. இந்தக் கடிதம் வந்து சேர்ந்த சில நாட்களில், மைக்கேல் இறந்து விட்டார் என்று சொல்லும் போது, அந்தத் தாய் கதறுகிறார். மைக்கேல் மூர் தனது சொந்தக் கருத்துக்களைத் திணிக்கிறார், இது அப்பட்டமான பொய் மூட்டை என்று ஆங்காங்கே புஷ் ஆதரவாளர்கள் குரல் கொடுத்த வண்ணம் தான் இருக்கிறார்கள். ஆனால், அதையெல்லாம் மீறி..படம் சக்கை போடு போடுகிறது. என்னைப் பொறுத்தவரை, போரின் அடுத்த பக்கத்தைப் பற்றியோ, புஷ்ஷின் முரண்பாடுகளைக் குறித்தோ எந்த அமெரிக்க மக்கள் தொடர்பு சாதனத்திலும் வெளிவராத போது, அமெரிக்கர் ஒருவர் பல மிரட்டல்களையும், தடைகளையும் மீறி இப்படி ஒரு படத்தை எடுத்ததற்கே, பல சபாஷ்களைப் பெறுகிறார். புஷ் ஆதரவாளர்களால், இந்தப் படம் எழுப்பியிருக்கும் எழுச்சியையும், வசூல் ரீதியான வெற்றியையும், ஆரவாரமான வரவேற்பையும் ஜீரணிக்க முடியவில்லை. -

இந்தப் படமானது தீவிரவாதிகளால் பணம் கொடுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது என்ற வதந்தியில் ஆரம்பித்து, படத்திற்கு எப்படியெல்லாம் பிரச்சினைகள் ஏற்படுத்தலாம் என்பது வரை... எல்லாம் முயற்சிக்கப்பட்டு, அவை தோல்வியும் அடைந்து, மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது போக, அமெரிக்காவை வெறுக்கும் மைக்கேல் மூர் என்ற படம், ஒரு சிலரால் போட்டிக்குத் தயாரிக்கப்பட்டு செப் 11 ஆம் தேதி அன்று வெளியிடப்பட இருக்கிறதாம். பாரன்ஹிட் 9/11 படம் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு, முதல் பரிசை வென்ற போது....இருபது நிமிடம் அரங்கத்திலுள்ளவர்கள் எழுந்து நின்று கைதட்டினார்களாம். இது கேன்ஸ் திரைப்பட வரலாற்றிலேயே ஒரு சாதனை என்று சொல்கிறார்கள். மைக்கேல் மூர், எனும் அந்த தைரியமான கலைஞர், பல்லாண்டு பல்லாண்டு பல நூறாண்டு, இன்னும் பற்பல நல்ல திரைப்படங்களை எடுக்க வேண்டும்.

# சினிமா



# எதிர்கால சினிமா

நா.மு.நிலவன்

நல்ல தமிழ்ப் பெயர்களை மட்டும் வைத்துக்கொண்டு உருப்படாத கதைகளோடு வந்தபடங்களும் உண்டு. ஆட்டோகிராப்போல ஆங்கிலப் பெயர்களை வைத்துக்கொண்டு வந்த 'அருமையான படங்களும் உண்டு! படங்களின் பெயர்களில் என்ன இருக்கிறது? என்று சிலர் நினைக்கலாம். தலைப்பிலேயே படம் எடுப்பவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு விடலாமே அதில் காணப்படும் விட்டேத்தியும், விடலைத் தன்மையும் தான் அந்தப் படம் முழுவதும் விரவியிருக்கும் என்பதுதானே சிக்கல்! மூலக்கதை கூட, அநியாயம் தோற்கும், நியாயம் வெல்லும் எனும் பஞ்சதந்திரக்கதையாக இருக்கலாம். ஆனால்,அதைக்காட்சி வடிவாக்க அவர்கள் காட்டும் தந்திரத்திற்குப் பஞ்சமே இருக்காது! அடாடா! குட்டிச்சுவரில் உட்கார்ந்து /வீதியில் பாட்டுப்பாடி வகுப்பு நேரத்தைக் கட்டடித்து, தம் அடித்து, பீர் குடித்து பெண்களைக் கிண்டல் செய்து / அப்பாவை எப்போதும் வெறுத்துப்பேசி / பொழுதைக் கழிக்கும் விடலைதான்பின்னர் ஊரே புகழும் பெரிய்ய்ய மனிதனாகிவிடுவானாம்! இந்த மாணவ விடலைகள் வேலை வாய்ப்பில்லாதவர்கள்தாம் திரும்பத்திரும்ப வந்து படத்தைப் பார்ப்பவர்கள் என்பது தெரியாதா என்ன? அதனால் படப்பெயர்கள் அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள்! சில ஆண்டுகளின் முன்பு ஜீன்ஸ் என்றொரு தமிழ்ப்படம் வந்தது. அட! இரட்டையர் கதை என்பதைஉணர்த்தும் வகையில். ஜீன்கள் (genes) என்று ஆழ்ந்து யோசித்துப் பெயர் வைத்திருக்கிறார்களே! என்று யாரும் புரிந்துகொண்டு விடக்கூடாது அந்தப் பட விளம்பரங்களில் (jeans) என்றே ஆங்கிலத்திலும் போட்டார்கள்! எந்தஅளவிற்கு அர்த்தமற்ற பெயர் வைக்கும் கலையில் இவர்கள் தேர்ந்திருக்கிறார்கள் பாருங்கள்! இந்நாளின் இழிந்த குணங்கள் பலவும் நிறைந்த தலைவர்களையே ஊடகங்களில் பார்த்துப் பார்த்து வளர்ந்துவரும்நம் குழந்தைகளுக்கு ஆதர புருஷர்கள் யார்? இளைய தளபதி, புரட்சிக் கலைஞர் இளைய திலகம்,எனும் தமிழ்ப் புகழ்மொழிகளோடு, சூப்பர் ஸ்டார், எவர்க்ரீன்-ஸ்டார் சுப்ரீம் ஸ்டார், அல்டிமேட்ஸ்டார் ஆக்ஷன்கிங் எனும் பட்டங்களோடும் சின்ன-வண்ணத் திரைகளில் உலாவந்து-உதிர்ந்து போகக்கூடிய-நட்சத்திரங்களையே இன்றைய மாணவர்கள், மற்றும் இளைஞர்கள் நெஞ்சில் நிறுத்திவருவது நெஞ்சைஉறுத்துவதாக அல்லவா இருக்கிறது? பொதுவாக நல்ல நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவும், கதையின் சாராம்சத்தைச் சொல்வதாகவுமே திரைப்படங்களின் பெயர்கள் இருக்கவேண்டும். அப்படித்தான் பெரும்பாலும் இருந்தன. ஆனால் இன்றும்இருப்பதாகச் சொல்லமுடியாது. இருப்பினும், நல்லதமிழில் - கவித்துவமாக இருக்கவேண்டும் என்பதில் பிடிவாத மாக இருந்த - இருக்கின்ற- சில இயக்குநர்களும் உண்டு! கல்யாணப்பரிசு முதல், காதலுக்கு மரியாதை வரை இந்த வகையினர் தொடர்வது பாராட்டுக்குரியது. ஆனால், புகழ் பெற்றுவிட்ட நடிகர்களுக்கான பட்டங்கள் கலைத் தன்மையிலிருந்து விலகி அரசியல் நோக்கோடு அமையத் தொடங்கியதும்,அவர்கள் தம்படப்பெயர்களை கதைகளை விடவும் தமக்காகவே அமைக்கத் தொடங்கியதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதுதான். இன்றைய இளம் நடிகர் ஒருவரை இளைய தளபதி என்று சொல்கிறார்கள். இந்த சினிமாத் தளபதிகள் எந்தப் போர்க்களத்தில் யாருக்கெதிராகப் படை நடத்தி, வெற்றிக்கொடி நாட்டினார்களாம்? திரைக்கதைப்படி அநியாயம் செய்யும் சில பெரியமனிதர்களின் அடாவடித்தனத்தை எதிர்த்து-டுப்புகளை பலிகடாவாக்கி- வேசப் போர்புரிவதற்கே இவர்களை தளபதி என்றழைத்தால், அதேபடங்களில், நடனம் என்ற பெயரில், அசிங்கமான அசைவுகளுடன் இவர்கள் வழங்கும் பாசக் கூத்திற்கு என்ன பட்டம் தருவது? இதனால், அவர்களுக்குக் கிடைப்பதோ சில பல கோடிகள். நம் குழந்தைகளுக்குக் கிடைப்பதோ எதார்த்தமற்ற ஒரு மாய உலகம் பற்றிய மனக்கோட்டைகள் தானே? இதிலிருந்து நம்குழந்தைகளை மீட்டெடுக்க, நம்மிடம் ஏதுமில்லையே? இந்தத்தளபதிகளும், சூப்பர்-சுப்ரீம் -அல்டிமேட்-எவர்க்ரீன் -ஸ்டார்களும் நடிகர் திலகத்தையோ புரட்சிநடிகரையோ முன்னுதாரணமாக நினைப்பார்களேயானால், அது கேலிக்கூத்தாகத்தான் முடியும். ஜெய்ஹிந்த் முழக்கத்துடன், தேசவிரோதிகளைப் பிடிக்கப் போவார்கள்! ஆனால் கூடவரும் ஒருபெண் கண்ணா என்சேலைக்குள்ள கட்டெறும்பு புகுந்திருச்சு என்று கதறுவாள்! இவர்கள் படங்களில், கல்லூரி மாணவராக வருவார்கள், உலகிலில்லாத ஒரு குரூப்டான்ஸ் இருக்கும். ஆனால் கல்லூரி முதல்வர் கேணையாகவும், ஆசிரியர்கள் கிறுக்காகவுமே இருப்பார்கள்! எங்களிடம் மட்டுமா சமூகப் பொறுப்பு அது இது என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? மற்ற தொழில்களைப் போலவேநடிப்பது எங்கள்தொழில்என்று இவர்களாக ஒருவிளக்கம் வேறு அவ்வப்போது தருகிறார்கள்! அவர்கள்வாதத்தின் படியே, திரைப்படமும் ஒரு தொழில்தான் என்று வைத்துக்கொண்டால் கூட அந்தத் தொழிலின் உற்பத்திப் பொருள் தரும் விளைவால் எத்தனைஇளம்உள்ளங்கள் விஷமாகி வருகின்றன என்பதையாவது இவர்கள்ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்? உற்பத்திப் பொருளைப் பயன்படுத்துபவன் பாதிப்புக்குஉள்ளாகும்போது உற்பத்தி செய்தவரைக்கேட்க உரிமை உண்டல்லோ?

தொலைக்காட்சியும் இதில் சர்வ அலட்சியத்துடனே செய்ல்படுவதும் பெரும்வேதனைக்குரியது. மற்றும் தொடர்கள் தரும் பண்பாட்டுச் சிதைவுகளை ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் இதுபோலும் கட்டுரைகள் இன்னும் பல எழக்கூடும். கில்லி, ஏய், சுள்ளான், போன்ற சிறுபிள்ளைத் தனமான தலைப்புகளில் வரும் படங்கள் -தமிழ்ச் சமூகத்தை மெதுவாய்க் கொல்லும் விஷங்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதன் பாதிப்பு உடனடியாகத் தெரியாது. சமூகச்சீரழிவில் -அவசியமான விஷயங்களை அலட்சியப் படுத்து வதில், அல்பமான விஷயங்களுக்கு ஆலாய்ப் பறப்பதில் இது கொண்டுபோய் விடும். தலைப்பை வித்தியாசமாக வைத்து, எப்படியாவது பார்த்துவிடத் தூண்டும் இவர்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, நல்ல படம் / நிகழ்ச்சி என்றால் மட்டுமே பார்ப்பது, அல்லது தவிர்த்துவிடுவது என்று இருந்தால் மட்டுமே தமிழ்ச்சமூகம் உருப்படுவது சாத்தியமாகும் என்பது சத்தியமாகும்.

## சுள்ளானுக்கு சுள்ளியாய் ஒரு விமர்சனம்

—ஆர்.எஸ்.அந்தணன்.



ஓப்பனிங் காட்சியிலேயே தனுஷ் மோட்டாவான வில்லனை தன் ஒல்லி கையை வைத்துக் கொண்டு புரட்டி எடுத்ததெல்லாம் தாங்கமுடியவில்லை. அது மட்டுமா? மூன்றாவது மாடியிலிருந்து பறந்து பறந்து அடிக்கிறார். அந்தரத்திலேயே பறக்கிறார். விமானத்தை கண்டு பிடித்த ரைட் சகோதரர்களின் ஒன்று விட்ட தம்பியாக இருப்பாரோ என்ற சந்தேகம் வர ஆரம்பித்துவிட்டது. ஆல் ஓவர் தமிழ்நாடு கலக்கலு என்று அவ்வப்போது வசனம் பேசிக் கொண்டிருந்தார் தனுஷ்! ஏதோ ரஜினி படத்திற்கு பன்ச் டயலாக் வைப்பது போல் வைத்திருந்தார்கள். சமீபத்தில் தனுஷுக்கு தொந்தரவு கொடுத்த தயாரிப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுவதுபோல் அவர் பேசும் வசனங்களில் பன்ச்!

புதுமுகம் சிந்து சில காட்சிகளில் தேமே என்று நிற்பதுதான் ஏன் என்றே புரியவில்லை, தனுசுக்கு அக்காவாக நடித்திருக்கும் ஈஸ்வரிராவ், பஸ்சில் தன்னை இடிக்கும் ஒருவனை, கேள்வி மேல் கேள்வியாக கேட்கிறாரே... நாக்கை பிடுங்கிக் கொள்வார்கள் இதற்கென்றே அலைபவர்கள்.

கண்ணை உருட்டிக் கொண்டு உடலை குலுக்கிக் கொண்டு ராட்சசன் போல் நடித்திருக்கிற பசுபதி, விருமாண்டியில் எப்படி நடித்திருந்தார் இதில் ஏன் இப்படி ஓவர் ஆக்டிங் பண்ணுகிறார்? விளங்கவே இல்லை. அதிலும், நேற்று வந்த துஷ்யந்த், தனுஷ் போன்ற பொடியன்களிடம் இப்படி உதை வாங்க வேண்டுமா என்ன? பிரகலாதன் இரண்யனை கொன்றது கொலைன்னா நீ செஞ்சதும் கொலைதான் என்று சொல்லிவிட்டு அக்கா நகர, தனுஷ் ஜெயிலுக்கு போகிற அந்த காட்சியோடு படம் முடிய எனக்குள் கேள்விகள் ஆரம்பித்தன.

படத்தின் ஒரு வரி கதை என்ன? ஒவ்வொரு படத்திலும் ரசிகர்களின் பரிதாபத்தையும் அன்பையும் சம்பாதித்து கொண்ட தனுஷ் இந்த படத்தில் எரிச்சலை சம்பாதித்துக் கொண்டது ஏன்?

நிஜமாகவே இது தனுஷுக்காக உருவாக்கப்பட்ட கதைதானா?

எல்லாரும் கொன்னுட்டு ஜெயிலுக்கு போவாங்க. ஹீரோ ஜெயிலுக்கு போயிட்டு கொல்றான். இதுதான் ஒரு வரி கதை!

இரண்டாவது கேள்விக்கு பதில்... இந்த படத்தில் தனுஷ் மேல் எரிச்சல் வருவதற்கு காரணம், அக்கா, அம்மா, அப்பா எல்லாரையும் தனுஷ் எடுத்தெறிஞ்சு மரியாதை குறைவா பேசுறதுதான், பெரிய போலீஸ் அதிகாரியா இருந்தாலும் அவங்களை சட்டையை பிடித்து மிரட்டுவதும் சிம்புவின் படங்களில்தான் நடக்கும்.. உண்மையில் இது சிம்புவுக்காக உருவாக்கப்பட்ட கதையாம். அவரு மன்மதன்ல பிசியா இருந்ததால தனுஷை நடிக்க வச்சாங்களாம். பாவம் தனுஷ் !

UNIGLOBAL EXCHANGE

BUREU DE CHANGE
TRAVEL AGENTS

WE BUY AND SELL FOREIGN CURRENCIES
NO COMMISSION / BEST RATES
WORLDWIDE MONEY TRANSFERS
BEST RATE FOR SRI LANKA & INDIA WITHIN 24 HRS SERVICE
BETTER RATE TO SRI LANKA, NO COMMISSION

230B NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX HA2 8DU
TEL: 0208 423 9988

UNIGLOBE exchange & travel

GLOBAL VIDEO&TELCOM

CALL SHOP and VIDEO CLUB
LOW COST INTERNATIONAL CALLS
TAMIL, HINDI VHS and DVD FILMS
RENTING and SALES
VHS TO DVD TRANSFER

230D NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX HA2 8DU
TEL: 0208 423 7744
FAX: 0208 423 8695

සිගිරි
சீகிரி
SIGIRI




தரத்தின் சின்னம்
SIGIRI இப்போது
12 நாடுகளில்
கிடைக்கிறது

தாயக உறவுகளுடன் தரமாக உரையாட ஒரு நிறைவான சேவை

SRI LANKA TELECOM இன் SIGIRI உங்கள் தேவை

**£5 FREE**

open a new home account with £25
and get £5 FREE

enjoy
home comforts
with a Sigiri*Home* account
from Sri Lanka Telecom

සිගිරි
சீகிரி
SIGIRI

call our hotline 24hrs on

**0207 094 9494**
**0800 485 1010**

best prices - best connections - best quality

visit www.sigiri.net

# இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

அம்மனைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்

## தேர்த்திருவிழா 08.08.2004 ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.



தேர் திருவிழாவைக் கண்டு வழிபட்டார்
சம்பவ தீர்ட்ஷ என்ற அருளைப் பெறுகின்றனர்.

பார் போற்றும் கனகதுர்க்கை அம்மன் தேர் ஏறி தெருவில்
ஊர்ந்து ஊர் சுற்றும் அற்புத காட்சி காண பெயர் பெற்ற
ஈலிங் நகரம் வாரீர்.



கிரிகைகள்

06.08.2004 (வெள்ளி) வேட்டைத்திருவிழா
07.08.2004 (சனி) சகோபுர தர்சன அருட் காட்சி (சப்பரம்)
08.08.2004 (ஞாயிறு) இரதோற்சவ விழா (தேர்)
09.08.2004 (திங்கள்) தீர்த்த வாரி அருட் காட்சி
10.08.2004 (செவ்வாய்) சங்காபிஷேகம் - சகஸ்திர (1008) பூங்காவனத் திருவிழா.
11.08.2004 (புதன்) வைரவர் மடை

குறிப்பு: அர்ச்சனைத்தட்டு மூலம் கிடைக்கின்ற காணிக்கை ஈழத்து சிறாரின் கல்வி வளர்ச்சிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. உங்கள் குடும்பத்தினரின் பெயர் நட்சத்திரம் விபரங்களை பதிந்து பொது உபயத்தில் பங்கு பெறலாம்.

### இலண்டன் துர்க்கை அம்மன் கிராமம்



பழைய வீடு

இலங்கை தமிழர் புனர்வாழ்வு கழகத்துடன் இணைந்து பாரம்பரிய அம்பாறையில் 100 வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் பங்கு கொள்ளுங்கள். காணிக்கை £50 ஆகும்.



புதிய வீடு



5, Chapel Road, West Ealing, W13 9AE

**Tel: 020 8810 0835 / 020 8840 0485**

visit: http://www.ammanuk.org - http://www.changetheirlife.org